24 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Sky Tamil Media Network (Pvt) Ltd


+94757000791 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com பதிவு இல: PV 00249082 ISSN 2792-1026

மாதந்தோறும் இதழ் - 24 10 நவம்பர் 2022 @skytamil.lk






வளர்ந்துவரும் பிரபல இளம் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் ரசீம்



இலங்கையின் 05 மாகாணங்களும் ஒரே இடத்தில் தெரியும் சுற்றுலாத்தளம்!



கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் பற்றிய அறிமுகம்



ஸ்கை தமிழ் ஊடகத்திற்கு கத்தாரில் பாராட்டு கிடைத்த தருணம்.

இலங்கையின் பிரபல கவிஞர், எழுத்தாளர், ஊடகவியலாளர், நிகழ்ச்சி தயாரிப்பாளர், பாடல் ஆசிரியர் என பல்துறை ஆளுமை கொண்ட

## பொத்துவில் அஸ்மின் அவர்களுடனான நேர்காணல்

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 24 | 10 நவம்பர் 2022




வளர்ந்துவரும் பிரபல இளம் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் ரசீம்

05 பக்கம்

31 பக்கம்

இலங்கையின் 05 மாகாணங்களும் ஒரே இடத்தில் தெரியும் சுற்றுலாத்தளம்!





கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் பற்றிய அறிமுகம்

36 பக்கம்

48 பக்கம்

ஸ்கை தமிழ் ஊடகத்திற்கு கத்தாரில் பாராட்டு கிடைத்த தருணம்.





இலங்கையின் பிரபல கவிஞர், எழுத்தாளர், ஊடகவியலாளர், நிகழ்ச்சி தயாரிப்பாளர், பாடல் ஆசிரியர் என பல்துறை ஆளுமை கொண்ட **பொத்துவில் அஸ்மின்** அவர்களுடனான நேர்காணல்

50 பக்கம்

24 ஆவது சஞ்சிகை

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்


**பிரதம ஆசிரியர்:**
ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித்
ஷிஹானா நௌபர்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ்
தாரிக் முஹம்மத்
குலசிங்கம் கிலசன்
முஹம்மட் ஹாசில்
பஹ்ரியா பாயிஸ்
ஜவ்சன் அஹமட்
பாத்திமா சகியா

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட்
கமறுன் நிஸாம்டீன்
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா
மஜினா உமறு லெவ்வை
பாத்திமா பின்த் சம்சுதீன்
சிவபாலன் கற்ப ஹாசினி
நாகூர் பாத்திமா அவ்ஷபா
பெனாஷில் ஷிப்னா
நிஹாசா நிசார்

**மேற்பார்வையாளர்:**
ஹொஸான் முஹம்மட்
அஸ்வர் ரிஸ்வி

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம். பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்


இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.


தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com





**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188


Scan QR Code

#Thuninthelu | #skytamil.lk | skytamil.lk | skytamil.lk




# ஸ்கை தமிழ் ஊடகத்திற்கு கத்தாரில் பாராட்டு கிடைத்த தருணம்.

கத்தார் மண்ணில் முதல்முறையாக தமிழர்களின் கலாச்சார சங்கமம் விழாவை சிறப்பாக நடாத்த உதவிய உள்ளங்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு!




இந்திய தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கத்தார் ஒருங்கிணைந்த தமிழர் பேரவை நடாத்திய மாபெரும் தமிழ் கலாச்சார சங்கமம் விழா சிறப்பாக நடாத்த உதவிய உள்ளங்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு (19.10.2022) கத்தார் இந்திய சமூக நல மன்றத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு ஊடக அனுசரணை வழங்கிய ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பை கௌரவிக்கும் முகமாக ஸ்கை தமிழ் ஊடகம் சார்பாக ஊடகத்தின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி அவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.




இந்த நிகழ்வில், டி.வி.எஸ் ஹைதர் குரூப் பணிப்பாளர் ஹைதர் அலி, அல்டிமேட் டிரேடிங் கான்ட்ரேஷன் பணிப்பாளர், திரு.சக்திவேல் மகாலிங்கம், மங்கள் மற்றும் மங்கை பண்ணை வீடு ரியல் எஸ்டேட் பணிப்பாளர் டாக்டர் வினி சுரீராஜ் பிரியங்கா சுரேஷ், ஸ்கை தமிழ் ஊடகத்தின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி, ஒருங்கிணைந்த தமிழர் பேரவை தலைவர் சமீர் அகமது, செயலாளர் வலியுல்லாஹ், நிகழ்ச்சி இயக்குனர் சக்திவேல், பேரவை நிர்வாகிகள் மற்றும் அனுசரணையாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# உலகக் கோப்பையைக் காண கத்தாருக்கு தனியாகக் காரில் செல்லும் கேரளாவைச் சேர்ந்த முஸ்லிம் பெண்

## நாஜி நௌஷி

கத்தாரில் பீஃபா உலகக் கோப்பை காற்பந்தாட்டம் நடைபெறவுள்ளது. இந்த போட்டியை காண கேரளா மாநிலம் மாஹேயை சேர்ந்த நாஜி நௌஷி என்ற ஐந்து குழந்தைகளுக்கு தாயான பெண் தனியாக சாலை மார்க்கமாக கத்தார் செல்ல திட்டமிட்டுள்ளார். அதற்காக மஹேந்திரா தார் ஜீப்பை தயார் செய்து பயணத்தை தனியாக தொடங்கியுள்ளார்.

காற்பந்தாட்டத்தின் திவீர ரசிகையும் , யூடியூபரும் ஆன நாஜி நவுஷி, கத்தார் நோக்கி தனது பயணத்தைத் தொடங்கினார். கோயம்புத்தூர் வழியாக மும்பையை அடைந்த பிறகு, அவர் தனது வாகனத்துடன் கப்பல் மூலம் ஓமானில் தரையிறங்குவார். பின்னர் அவர் சாலை வழியாக பயணம் செய்து கத்தாரை ஐக்கிய அரபு அமீரகம், பஹ்ரைன், குவைத் மற்றும் சவுதி அரேபியா வழியாக சென்று அடைவார்.








# ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பின் வெளியீடு லண்டன் நூலகத்திற்கும்...

இலங்கையின் புல்மோட்டை பிரதேசத்தை சேர்ந்த தௌபீக் முஹம்மது நவீத் எழுதிய, ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பினால் வெளியிடப்பட்ட ஈரம் காயாத எழுத்துக்கள் எனும் நூல் லண்டனில் அமைந்துள்ள London Forest Hill library நூலகத்திற்கு புல்மோட்டை பிரதேச சபையின் தவிசாளர் முபாரக் அவர்களின் தம்பியான ரபாய்த்தீன் அவர்களின் பெரும் முயற்சியினால் அண்மையில் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.











# கத்தார் மண்ணில் முதல்முறையாக தமிழர்களின் கலாச்சார சங்கமம் விழா!

ஒருங்கிணைந்த தமிழர் பேரவை - கத்தார் மற்றும் TVS GROUP ( YAFA CARGO ) இணைந்து நடாத்திய தமிழர்களின் கலாச்சார சங்கமம் 13.10.2022 திகதி வியாழக்கிழமை கத்தார் அல் வக்ராவில் அமைந்துள்ள மார்டன் இந்தியன் பாடசாலையில் நடைபெற்றது.

விஜய் டிவி சூப்பர் சிங்கர் "டைட்டில் வின்னர்" மற்றும் திரைப்பட பின்னணி பாடகர் செந்தில் கணேஷ், பாடகி ராஜலட்சுமி மற்றும் இசை குழுவினர் கலந்துகொண்டனர். இந்நிகழ்ச்சிக்கான ஊடக அனுசரணையை ஸ்கை தமிழ் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

பிரம்மாண்டமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் கத்தார் நாட்டில் உள்ள இந்தியா, இலங்கை தமிழ் பேசக்கூடிய உறவுகள் கலந்துகொண்டனர்.
















# பலாங்கொடை சீ.சீ தமிழ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இலவச ஊடக செயலமர்வு

## 3ஆவது செயற்திட்டம்

ஸ்கை தமிழ் மற்றும் சிறகின் மொழி இணைந்து நடாத்தும் பாடசாலை மாணவர்களுக்கான இலவச ஊடக செயலமர்வு கடந்த அக்டோபர் மாதம் 18ம் 19ம் மற்றும் 20 ஆம் திகதிகளில் ஆறு அமர்வுகளாக பலாங்கொடை சீ.சீ தமிழ் மகா வித்தியாலயத்தில் மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றது

இச் செயலமர்வானது பாடசாலையின் அதிபர் பெருமாள் தம்பிராஜ் அவர்களின் தலைமையில் பனூர்தீன் பாத்திமா சப்ரினா ஆசிரியர் அவர்களின் கண்காணிப்பின் கீழ் இடம் பெற்றது. இதில் தரம் 8 தொடக்கம் 12 வரையான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர்களுக்கு ஊடகத்தை பற்றிய ஒரு தெளிவான விளக்கமும் இன்றைய காலகட்டத்தில் சமூக வலைத்தளங்களால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளில் இருந்து வெளிவருவதற்காக அவர்களுக்கான ஒரு வழி காட்டலும் விழிப்புணர்வும் வழங்கப்பட்டன. வளர்ந்து வரும் டிஜிட்டல் ஊடகங்களுடன் அவர்கள் பயணிப்பதற்கான வழிகாட்டல்களும் வழங்கப்பட்டன.

இவ் இலவச செயலமர்வு ஸ்கை தமிழ் ஊடகத்தின் பிராந்திய முகாமையாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியருமான ஷிஹானா நௌபரினால் நடாத்தி வைக்கப்பட்டது இதில் 450 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து பயன் பெற்றனர்

இதன் போது பாடசாலை ஊடகப் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலும் பாடசாலை அதிபருடன் மேற்கொள்ளப்பட்டது.

FUTURE OF DIGITAL Journalism
Sky Tamil Media Network (Pvt) Ltd.


# 24 ஆவது

## ஒக்டோபர் மாத இதழ்

சஞ்சிகை பற்றிய
உங்கள் கருத்துகளை எமக்கு
அனுப்பி வைக்கவும்

+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com





# வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "வாசிப்பு ஒரு வாழ்க்கை முறை" வழிகாட்டல் கருத்தரங்கு

ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஒரு பகுதியாக இயங்கிவரும் வாசிப்பை சுவாசிப்போம் குழுமத்தினரால் வாசிப்பு மாதத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட "வாசிப்பு ஒரு வாழ்க்கை முறை" வழிகாட்டல் கருத்தரங்கு 16.10.2022 திகதி நிகழ்நிலையின் வாயிலாக வெகு விமர்சையாக நடைபெற்றது.




இந்நிகழ்வை ஊடகவியலாளரும் எழுத்தாளருமான முஹம்மத் ஹாசில் தொகுத்து வழங்கினார். அத்துடன் வாசிப்பை சுவாசிப்போம் குழுமத்தின் பிரதான செயற்பாட்டாளரும் துணிந்தெழு சஞ்சிகையின் இணை ஆசிரியருமான முனீரா வாஹித் அவர்களால் இக்குழுமம் பற்றிய அறிமுகம் இடம்பெற்றது.




நிகழ்ச்சியின் பிரதான அம்சமான "வாசிப்பு ஒரு வாழ்க்கை முறை" கருத்தரங்கு இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் துணை விடுதிப் பொறுப்பதிகாரியும் ENGLISH FOR EVERYONE நிருபருமான செல்வி ஏுமி ரிஸானா அவர்களால் சிறப்பான முறையில் நடாத்தி வைக்கப்பட்டது.




**சம்மாந்துறை மண்ணில் இருந்து நிழல் கூறும் நிதர்சனம் குறுந்திரைப்படம் வெளியாகி விட்டது.**

நமது ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பிரிவின் ஊடக அனுசரணையில் துறையூர் எப்.எம் யூடியூப் சேனல் இன் தயாரிப்பில் சம்மாந்துறை வரலாற்றில் பதிவான குறுந்திரைப்படம்.
நமது ஆதரவினை வழங்குவோம்.







YouTube CLICK HERE


சிறுவர்களுக்கான செய்தி வாசிக்கும் போட்டி
NEWS
sky தமிழ் TV CHANNEL
உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு
சிறுவர்களுக்கான செய்தி வாசிக்கும் போட்டி
தமிழ் மொழி பிரிவில்
தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள்
Haya Rizwan -Kurunegala
முதலாவது வெற்றியாளர்
Darshana - Batticaloa
இரண்டாவது வெற்றியாளர்
Fathima Salma - Thihariya
மூன்றாவது வெற்றியாளர்
#skytamil.lk
www.skytamilmedia.com
துணிந்தெழு


சிறுவர்களுக்கான செய்தி வாசிக்கும் போட்டி
உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு
sky தமிழ் TV CHANNEL
சிறுவர்களுக்கான செய்தி வாசிக்கும் போட்டி
ஆங்கில மொழி பிரிவில்
தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்கள்
Rukaiya Fazmil - Digana
முதலாவது வெற்றியாளர்
Aaliya Aswer
Nawalapitiya
இரண்டாவது வெற்றியாளர்
HAFSA ASHAF
STAFFORD SRI LANKAN SCHOOL, QATAR
மூன்றாவது வெற்றியாளர்
#skytamil.lk
www.skytamilmedia.com
துணிந்தெழு

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 24 | 10 நவம்பர் 2022



# முல்லைக்கொடி



ஜெனிதா மோகன்.
நற்பிட்டிமுனை

இயற்கை அன்னை அளித்த அத்தனை அற்புதமும் நிறைந்த அழகிய கிராமத்தில் பரம்பரை பணக்காரர்களாக மாதவியின் குடும்பம் காணப்பட்டது. அழகிய குடும்பத்தில் அழகான தேவதையாக வாழ்க்கையை இரசித்தபடி சந்தோஷமாக இருந்தாள். காலங்கள் ஓடின.மாதவியும் வளர்ந்தாள். பெற்றோரும் அவளுக்காக வரம் தேட தொடங்கினார்கள். பெற்றோர் மீது அதிக பாசம் கொண்ட மாதவி பெற்றோர் பார்க்கும் மாப்பிள்ளையை தான் திருமணம் முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள்.

பெற்றோர் மீது அளவு கடந்த பாசம் என்று கூடச் சொல்லலாம். பெற்றோருக்கு ஒரு பிள்ளையாக இருந்த மாதவி குடும்பம் மீது அளவுகடந்த பாசத்துடன் இருந்தாள். ஒரு நாள் மாதவியை பெண் பார்க்க சுந்தர் வந்தார். பார்ப்பதற்கு அழகாகவும் படித்தவர் போன்றும் இருந்தார். மிகவும் சிறந்த குணமுடையவர் சுந்தர் என்று அவரது பெற்றோர்கள் அவருக்கு சான்றிதழ் வழங்கினார்கள். பெற்றோர்களின் ஆசியுடன் திருமணம் நடைபெற்றது.

மகிழ்ச்சியான இல்லற பந்தத்தில் மாதவிக்கும் சுந்தருக்கும் ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. அந்த ஆண் குழந்தைக்கு பெயர் சூட்டு நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டனர். அந்த ஆண் குழந்தைக்கு சாம்பவன் என பெயரிட்டனர்.அந்த நிகழ்ச்சி முடிந்தது. வேலைப்பளு காரணமாக களைப்பு அதிகமாக இருந்ததால் இரவு தூங்கச் சென்றாள் மாதவி. சுந்தர் "மாதவி" என அழைத்தான். "இன்று சந்தோஷமான நிகழ்வு. இன்னும் ஒரு சந்தோஷமான செய்தி உண்டு. ஆனால் இதை எப்படி எடுத்துக்கொள்வாய் என சங்கடத்துடன் இருக்கின்றேன். இருந்தாலும் இதனைச் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றேன்" என்றான். "எனக்கு அமெரிக்கா போவதற்கு அனுமதி கிடைத்திருக்கின்றது. அடுத்த கிழமை நான் போகவேண்டும். நான் போய் ஓரிரு வருடங்களில் உன்னையும் பிள்ளையையும் அங்கு எடுத்துக் கொள்வேன்" என்றான். மாதவிக்கு அடைப்பு வந்தது போல் இருந்தது. அவளது தலையில் இடி விழுந்தது போல் இருந்தது. "தலையில் குண்டை தூக்கிப் போடுகிறீர்கள். ஏன் இதெல்லாம் நீங்கள் ஆரம்பத்தில் இதெல்லாம் சொல்லவில்லை. நான் கடைசி வரையும் என் பெற்றோர்க்காக வாழ நினைப்பவள். என் குடும்பத்தில் என்னை தவிர வேறு பிள்ளைகள் இல்லை என உங்களுக்கு தெரியும்.

எனவே என் அம்மா அப்பாவின் கடைசி காலம் வரை நான் அவர்களோடு தான் இருக்க வேண்டும் அது என்னுடைய கடமை நீங்கள் ஆரம்பத்தில் இவ்வாறான எண்ணம் இருப்பதாக தெரிவித்திருந்தால் நான் இந்த திருமணத்தை புரிந்திருக்க மாட்டேன். இப்படி நீங்கள் சொல்வது நியாயமா? நாம் சந்ததியாக வாழ்வதற்கு நம்மிடம் நிறையவே பணம் இருக்கின்றது. உங்களுக்கும் இங்கு நல்ல வேலை தானே. நீங்கள் இங்கு இருக்க வேண்டும் என்பதே என் ஆசை.

தயவுசெய்து இந்த வெளிநாட்டு மோகத்தை நமது குடும்பத்திற்காக விட்டுவிடுங்கள். சொர்க்கம் என்றாலும் நம்ம ஊரை போல வருமா என்று உங்களுக்குத் தெரியாதா?"என கேட்டாள். "பட்டிக்காடு பட்டிமன்றம் வைக்குது. உன்கிட்ட எந்த கருத்தும் நான் கேட்கவில்லை. என் முடிவைச் சொன்னேன். இது என்னுடைய இலட்சியம். என் கனவு இது. இதற்கு யாரும் தடையாக இருந்தால் அவர்களை நான் மன்னிக்கவே மாட்டேன். யாருக்காகவும் என் கனவுகளை சிதைக்க மாட்டேன். நான் போவது உறுதி. நீ என்னுடன் வருவதாக இருந்தால் ஓரிரு வருடங்களில் வரலாம். இல்லை என்றால் நீ விபரீதமான முடிவுகளை சந்திக்க நேரிடும். எந்த சத்தமும் போடாமல் இருக்க வேண்டும். இழுத்துப் போர்த்திக் கொண்டு எதுவுமே பேசாது அழகாக தூங்கிக் கொண்டிருந்த குழந்தையின் தலையைத் தடவிக் கொண்டவளாக கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் வழிந்தோட களைப்பினால் தூங்க வந்தவளின் கண்கள் விறைத்துப் போயின. மனதை ஒருநிலைப்படுத்த முடியாதவளாக அன்றிரவு நகர்ந்தது.

அடுத்த நாள் இரவு பதினொரு மணிக்குத்தான் சுந்தர் வீட்டுக்கு வந்தான். மாதவி தன்னுடைய வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தாள். அவன் முடிவு மாறாது என்பதை புரிந்துகொண்ட மாதவி உள்ளுக்குள்ளே தவித்துக் கொண்டிருந்தாள். தன் கையில் எதுவும் இல்லை. இனி இறைவன் பார்த்துக் கொள்ளட்டும் என்று கடவுள் மீது பாரத்தை போட்டு கொண்டு நடந்தாள். சுந்தர் வெளிநாடு போற நாள் வந்தது. மாதவியின் பெற்றோருக்கும் உண்மை விளங்கியது. ஒரே ஒரு பிள்ளையினுடைய வாழ்வை நினைத்து கண்ணீர் விட்டனர். குழந்தைக்கும் தந்தையின் அன்பு கிடைக்காமல் தவிக்கப் போகின்றது என்பதை உணர்ந்து அழுதார்கள். உறவினர்கள் எத்தனையோ பேர் வந்து சொன்னார்கள். சுந்தர் யாரின் கதையையும் கேட்கவில்லை. அவன் வெளிநாடு சென்றுவிட்டான்.

வெளிநாட்டிலிருந்து திரும்ப வந்த மாதவியின் கணவன் தன்னுடன் மாதவியையும் அழைத்துப் போக எண்ணினான். அவள் வெளிநாடு போக மறுத்தாள். "தன்னுடைய பிள்ளையின் எதிர்காலம் சிறப்பாக அமைய வேண்டுமென்றால் அந்த பிள்ளை என்னுடன் வரவேண்டும் இதற்கு நீ உடன்படா விட்டால் பல்வேறு விளைவுகளை சந்திக்க வேண்டும்" என்றான். மாதவி திகைத்து நின்றாள். தன் பிள்ளையை அழைத்துக் கொண்டு வெளிநாடு சென்று விட்டான். காலங்கள் வேகமாக ஓடின. மாதவியின் பெற்றோரும் இறந்து விட்டனர். மாதவி தனியாக பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தாள். பல்வேறு விமர்சனங்கள் அவள் காதுகளை வந்தடைந்தன. மன உளைச்சலால் தத்தளித்தாள். யாரைக் குற்றம் சொல்வது பிறந்த தன்னுடைய குழந்தையை பிரிந்து, பெற்றோரை இழந்து, கணவனைப் பிரிந்து எல்லாம் இருந்தும் எதுவுமே இல்லாத ஒரு வாழ்க்கை வாழ தன்னுடைய விதி அமைந்திருக்கின்றதே என கவலையுடன் தத்தளித்தாள். பரிதாபமாக பார்ப்பவர் சிலர். ஏளனமாக சிரிப்பவர் பலர்.

எல்லோரையும் எதிர்கொள்ள முடியாமல் தன்னுடைய பூர்வீகச் சொத்துக்களை எல்லாம் விற்று விட்டு அந்த பணத்தை எடுத்துக்கொண்டு வேற ஒரு மாகாணத்தை நோக்கி நகர்ந்தாள். அங்கு ஒரு வளவு வாங்கி அதில் ஒரு பெறுமதியான வீட்டை கட்டினாள். பக்கத்து வீட்டாருடன் உறவினர்கள் போல் பழகினாள். தன்னுடைய சொந்தக்காலில் நிற்க வேண்டும் என்று ஒரு தொழிலிலும் இணைந்து கொண்டாள். காலங்கள் வேகமாக ஓடின. தன்னுடைய மகனும் பெரியவனாகி திருமணம் முடித்துவிட்டான்.

ஒரு நாள் தன்னுடைய தாயைப் பார்ப்பதற்காக அவருடைய புகைப்படத்தை எடுத்துக் கொண்டு வந்தான். பிள்ளை செய்த பிழைதான் என்ன அறியாத வயதில் தந்தையின் கரம்பிடித்து போனான். எனக்கு தன் பிள்ளையுடன் போவதற்கு முடியாமல் தடுத்தது என் பெற்றோர்களின் நிலைமைதான் யாரை இதில் குற்றம் சொல்வது என்று தன்னுள்ளே குழம்பிய வளாக தன்னுடைய மகனை அணைத்துக்கொண்டாள். அவனுடைய குடும்பத்தை ஏற்றுக்கொண்டாள். "தன்னுடைய இறுதிக் காலத்திற்குப் பிறகு தன்னுடைய சொத்துக்களை எல்லாம் என்மகனே எடுக்கட்டும். என்னால் முடிந்தவரை நான் உழைத்து சாப்பிடுவேன். தனிமை எனக்கு பழகிப் போய்விட்டது. யாரையும் குற்றம் சொல்ல முடியாது. எல்லாமே என் தலைவிதி. நெருங்கிய உறவுகளை விட பழகிய உறவுகள் மேலானதே. கடவுள் தன்னை அழைக்கும் வரை இப்படியே என் எல்லாம் முடியட்டும்"என்று தன் பாதையை நோக்கி பயணிக்கிறாள்.

முற்றும்

# உத்தம நபியே!

கவிப்பொய்கை
ஜவ்ஸன் அஹமட்

வல்லவன் இறைவனை
வரிகளில் போற்றிய பின்
வச்சணத்தி ஜோதி நபிமீது
வங்கநீராய் ஸலவாத்துரைத்தபடி
துவங்குகிறேன்.

நபி பிறந்த நாளிலே
நயம்படவே நபி புகழ்பாடி
நபியவரின் குணங்களையும்
நன்றாக நானுரைப்பேன்
இவ் வையகத்தில்.

மாற்றான் மண்டை ஓட்டில்
மது அருந்த, மாந்தர்கள் மனம்
போன போக்கினிலே வாழ,
மாசற்ற குணத்தாலும் மன்னிக்கும்
மனதாலும் மா மனிதராகி
போனவரே யா ரஸுலல்லாஹ்.

மக்கத்தில் நீர் பிறந்து
மதினத்தில் மறைந்தாலும்
மகத்தான வெற்றியிலே
மனமுவர்ந்து போனீரே
மறக்கத்தான் இயலமோ உம்மை
மஹ்மூது யா ரஸுலே.

தாய் தந்தை இழந்தீர்கள்
தனியாக வளர்ந்தவரே
தாஹா நபியே உம்மை
உயிரிலும் மேலாக நினைத்தபடி
தினம் ஸலவாத்துரைக்கிறேன்
உம்மி நபியே யா ரஸுலே!

அல் அமீனாய் வாழ்ந்து
அஸ்ஸாதிக்காய் அறிமுகமாகி
அயலாரை அனுசரித்த கோமானே!
உம்மியாக இருந்தாலும் நம்மில்
உதாரணப்புருசராகிப் போனீரே
உமை காணவேண்டும் யா ரஸுலே!

தாயிப் வீதிகளும் மதினத்து
புழுதிகளும் உம் மணம் கமழ
எம் எண்ணங்கள் முழுக்க
அவா கொள்ளுதே யா ரஸுலே -
அம் மண்ணில் நடை பயில
பிராத்தனைகள் பரிய,

செல்வங்கள் யாவும் உமக்கு
சிரம்பணிய ஏழையாக வாழ்ந்த
ஏந்தல் ரஸுலே! எண்ணற்ற
முறைகள் உம்மீது ஸலவாத்
உரைக்கிறேன் ஸல்லல்லாஹு
அலா முஹம்மத்.

# கல்விப் பயணம்

பாதச் சுவடுகளின் அடி வைப்பில்
வருடங்கள் உருண்டோடி விட்டன
இன்றல்ல நேற்றல்ல ஆறிரு ஆண்டுகளும்
கடந்து சோர்ந்து தேய்ந்தே போய் விட்டன.

பயணம் தான் இன்னும் முடிந்தபாடில்லை
கல்வி என்ற நாமம் தரித்த
இப்பயணத்திற்கு முற்றுப்புள்ளியிடும்
அந்நாள் எப்போது என்பதை யான் அறியேன்.

அன்பில் ஏறி அறிவில் பயணிக்கும்
அம்மா முதல் ஆசான் துணை வரை
'அ' தொட்டு 'ஔ' வரையான
அகராதிப் பயணம் இது இலட்சிய
வேட்கை இது.

தன்னம்பிக்கையை பாதை முழுவதும்
படம் பிடித்து வெற்றி தோல்விகளில்
சற்றே இளைப்பாறி விடா முயற்சியை
பயண மணிக்கூடாய் சூடி கற்றலை
நகர்த்தும் அற்புதப் பயணமிது.

எதிர்பார்ப்புக்களை ஏணிப்படிகளாக்கி
இலட்சியத்தை திறமைக்கு ஆடையாக்கி
எதிர்கால உலா வருதலுக்கான
நிழலாயமைந்த நிஜப் பயணமிது.

பள்ளிக் காலம் விடைபெற்றாலும்
பருவ காலம் மாறினாலும்
பயணம் இது ஓயாது
பயணியையும் வையாது.

ஹாஸ்மியா தாஹா.
கலாவெவ முஸ்லிம் மத்திய கல்லூரி.



# விடுதி நாட்கள்



உதயகுமார் ரதிகலா.
மாத்தளை.

அந்த நாட்கள்,அந்த நிமிடங்கள், அந்த பொழுதுகள் என்றுமே நெஞ்சை விட்டு நீங்காத நினைவலைகள். நான்கு சுவர்களால் மூடப்பட்ட அறைக்குள் குடியேறிய நாள்.

ஒரு வருட காலமாய் நிகழ்நிலையிலேயே நீடித்த சொந்தங்களை அது நீயா? இது நீயா என அறிமுகமாகி அகமகிழ்ந்த தருணங்கள். இது எனது இடம்,அது உனது இடமென அடுக்கடுக்காய் கதை பேசி பொருட்களை அடுக்கிய தருணங்கள்.

பரீட்சைக்கு மட்டும் படிக்கும் தோழமைகள்.
சாப்பாடு வந்ததை அறிவிக்கும் அக்காவின் கம்பீர ஒலி
வெறும் தூக்கத்திலே கழிந்து போகும் பகல் பொழுதுகள்.
மின்சாரம் இல்லாத இடத்தை நிரப்பும் பாட்டு கச்சேரிகள்.

பெயருக்கு வைக்கப்பட்ட மின் விசிறிகளில் காற்றுக்காய் தவமிருந்த அந்நாட்கள். உப்பில்லா உணவுக்காய் பல மணிநேரம் உறைந்து கிடந்த பொழுதுகள். ஒருவரின் துன்பத்தை அனைவருமாய் பகிர்ந்து கொண்ட பாச போராட்டங்கள்.

இனிக்க இனிக்க கதைபேசி இன்பமாய் கழிந்த இராப்பொழுதுகள். சிறுக சிறுக சேமித்து நள்ளிரவில் கொண்டாடிய பிறந்தநாள் விழாக்கள்.

கடைசியாய் பிரிய மனமின்றி கனத்த சோகங்களை நெஞ்சிலே நிரப்பிக் கொண்டு விடுதிக்கு விடைக்கொடுத்த இறுதி நாட்கள் இவையெல்லாம் நினைக்கையில் இனிக்கும் நியாபக பொக்கிஷங்கள்.

விடுதி நாட்களை கடந்த பின்தான் உணரமுடிகிறது அந்த நான்கு மதில் சுவர் சிறைச்சாலை அல்ல சுவர்க்க பூமி என்று.





# கடல் மகன்



பாத்திமா நுஸ்கா அலாவுதீன்.

நெற் குவியலில் பதரை பிரித்தறியும்
விவசாயியும், கடல் மகனாய் சித்தரிக்கும்
என் தந்தையும் ஒன்றல்ல.

ஏனெனில் இறைவனை இறைந்து
தன்னையே தியாகம் செய்யும்
கடல் மகன் - அவர்.

பிறப்பாக குடிசையில், வாழ்வாக
கரையினில், வாலிபம் முழுவதும்
கடலோடு இன்று தண்டயலாய் - என்
கடல் மகன்.

துயில் நீக்கமாக துறை துறையாய்
ஓடும் - படகின் வேகமும் , அதை
நோக்கிய பாரிய அலையுமாக - உயிர்
பிழைப்பதென்னவோ சுலபமா?

வலையின் வித்தியாசம், கருவிழியின்
நரம்புகளில் செய்கையும் செவ்வனவே
வாய்மையும் உறுதியாக.

கடற்கோலம், படகின் அழகு
காற்றின் திசையும், மீனோட்டமாக.

கடலினுள் சில வாழ் நாட்கள்,
கரையினில் கண்டவுடன், கூடி வரும் -
பிற படகினர். பார்த்ததும் போற்றுவர்
மீனின் வகைகளை.

கையின் ரேகையும் தலையின் நாளமும்,
அல்லாஹ்வின் அருட்கொடையாக
அதேபோல் கடலின் உயிரினமும்

அல்லாஹ்வின் அருட்கொடை தான் என்று.

அநியாயங்கள் செய்யாமல் அன்பாய்
நடக்கும் பண்பு பேணு. என்பது - கடல்
மகன் எனக்கு கூறிய அறிவுரை.

கடல் மகனை கஞ்சன் என்று
நினையாதே! பார்வையில் சின்னமாக
இருந்தாலும், மனதில் கடல் அலைகள்
பாயும் கையிருப்பில் பிறர் தேவையை
நிறைவு செய்யும் - என் கடல் மகன்
எனக்கு கிடைத்த வரமே.

எழுதியவரின் பெயர் - "கவியின் முத்து. "




## கத்தார் 22 ரியால் அறிமுகம்

பீஃபா உலகக் கோப்பையை
நினைவுப்படுத்தும் வகையில் கத்தார்
மத்திய வங்கி உலகக் கோப்பை
சின்னங்களைக் கொண்ட 22 கத்தார்
ரியால் பணத்தாள் மற்றும்
நாணயங்களை இன்று
அறிமுகப்படுத்தியுள்ளது.


துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
ஆளுமைகளுக்கான
தேடல்
சமூகத்தில் ஒளிந்திருக்கும் திறமைமிக்கவர்களை இணங்கண்டு அவர்களை அறிமுகப்படுத்தி, ஆற்றல்களை வெளிக் கொணர்வதை துணிந்தெழு சஞ்சிகை செயற்படுத்தி வருகின்றது.
நீங்களும் இவ்வாறான நபர்களை இணங்கண்டால் அல்லது அறிந்து கொள்ளும் வாய்ப்புக்கள் கிட்டினால் தொகுப்பாக எழுதி எமக்கு அனுப்பிவையுங்கள்.
நாங்கள் சஞ்சிகையில் பிரசுரிக்க உள்ளோம்.
0757000791
+97431060249
skytamil.lk@gmail.com
#Thuninthelu
www.skytamilmedia.com






ஷிஹானா நௌபர் B.Sc. in Psychology UG (IOU) துணிந்தெழு - இணை ஆசிரியர்





# கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம் பற்றிய அறிமுகம்

ஒரு சமுதாயத்தினுடைய மாற்றத்தின் துவக்க புள்ளியின் ஆரம்ப ஸ்தலம் பாடசாலைகள் தான். தனிமனித ஆளுமை முன்னேறவும் நாட்டை ஆளும் ஒரு ஆட்சியாளன் உருவாவதற்கும் பங்களிப்பதில் பாடசாலைகளே துணை நிற்கின்றன. அந்தவகையில் இரத்தினபுரி மாவட்டத்தில் நிவித்திகல வலயத்திற்குட்பட்ட கஹவத்தை பிரதேசத்தினுடைய மாற்றத்திற்கான ஆரம்ப புள்ளியாக இருப்பது தான் கஹவத்தை சமுதாயத்தின் கல்விக்கான கதவுகள் 2008 வரை திறக்கப்பட்டிருக்கவில்லை.

கல்வியின் அவசியத்தையும் முக்கியத்தையும் உணர்ந்த கஹவத்தை பிரதேசத்தின் ஆசிரியர்களும், முக்கியஸ்தர்களும், மக்களும் "கஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம்" என்ற பெயரில் ஒரு பாடசாலையை எல்லே கஹவத்தை எனும் பிரதேசத்தில் உருவாக்க அயராது உழைத்தனர். அந்த உழைப்பின் பெறுபேறே கஹவத்தை முஸ்லிம் வித்தியாலயமாகும். இப்பாடசாலை வெறுமனே உருவாகியதொன்றல்ல. இதன் பின் எத்தனையோ சொல்லிலடங்காத வலிகளின், கனவுகளின் விளைவை சரித்திரமாக கொண்டதே இப்பாடசாலை ஆகும்.

கஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் என்ற எம் பாடசாலையானது 2009 ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியன்று திறந்து வைக்கப்பட்டது. திறக்கப்பட்டது வெறும் கட்டிடம் மட்டுமல்ல பல பேரினுடைய கனவுக்கான கதவுகளும் தான் என்றும் சொல்லலாம். இப்பாடசாலையின் முதல் அதிபராக திரு. எம்.எம்.எம். பாஹிம் அவர்களின் பொறுப்பின் கீழ் 4 ஆசிரியர்களையும் 51 மாணவர்களையும் கொண்டு தரம் 1 தொடக்கம் தரம் 3 வரை வகுப்புகளால் இயங்கிக்கொண்டிருந்தது.

மூங்கில் மரங்கள் எடுத்த எடுப்பிலேயே வளர்ந்து விடுவதில்லை. அது வளர முதற்கட்டங்களுக்கு சில காலங்கள் தேவை . சில வேர்களை மண்ணோடு பிடித்துக்கொண்ட பின் சில காலத்தின் பின் வளர ஆரம்பித்தால் அதனுடைய வளர்ச்சி வீரியமாக காணப்படும் என்பதை போல இந்த பாடசாலையின்



வரலாற்றில் முதன் முறையாக 2011 ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 03 மாணவர்கள் சித்தியுடன் கோட்ட மட்டத்தில் மற்றும் வலய மட்டத்தில் தனித்துவ அடையாளத்தை பெற்று தன் வளர்ச்சியை காட்டி நின்றது. அத்தோடு மற்றும் நின்றுவிடாமல் தொடர்ந்தும் அடுத்தடுத்த வருடங்களில் தன் வெற்றிகளை புலமைப்பரிசிலில் மாணவர்களை சித்தி பெற செய்வதன் ஊடாக தன் இருப்பை நிலைநிறுத்திக்கொள்ளலாயிற்று. இவ்வாறான தொடர் வெற்றிகளின் விளைவால் கஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் 2013ம் ஆண்டு “பயன்மிகு பாடசாலை” என்றதொரு விருதையும் பெற்று தன் வெற்றிப்பயணத்திற்கு ஒரு மைல் கல்லாக்கிக் கொண்டது.

புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளோடு மாத்திரம் தன் பயணத்தை சுருக்கிக் கொள்ளாமல் திரு.எம்.எம்.எம். பாஹிம் அவர்களினதும் ஏனைய ஆசிரியர்களினதும் அயராத உழைப்பினாலும் 2015ம் ஆண்டு வரையில் தரம் 9 வரையில் இருந்த இந்த பாடசாலையில் 2016ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவதற்கான முயற்சிகள் எடுத்து அதில் வெற்றியும் கண்டது. அந்தவகையில் பாடசாலை வரலாற்றில் 2017ம் ஆண்டு முதல் தடவையாக பரீட்சைகு தோற்றிய மாணவர்களில் 78.5% மாணவர்கள் சித்தி பெற்று சாதனை படைத்தனர்.

2009 தொடக்கம் 2016 வரை பாடசாலையின் வெற்றிகளுக்கு ஓர் ஆதாரமாய், அடித்தளமாய் உந்து சக்தியாய் இருந்த ஆசிரியை சாதிமாவினுடைய திடீர் மரணம் ஒட்டு மொத்த சமுதாயத்தையே ஒரு தடவை உலுக்கிப்போட்டது. மறைந்தாலும் இந்த பாடசாலையும் மாணவர்களும் இருக்கும் காலமெல்லாம் அவர்களின் நுனி நாக்கிலிருந்து ஆங்கில உச்சரிப்பு இருக்கும் வரை அந்த ஆசிரியை வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்.

2017ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் பாடசாலை பெற்றுக்கொண்ட சாதனையின் விளைவாக மீண்டும் “பயன்மிகு பாடசாலை” என்ற விருதுக்கு தகுதி பெற்று விருதையும் தன்வசப்படுத்தி நிவித்திகல வலயத்திற்கே பெருமை சேர்த்தது. தொடர்ந்தும் 2018ம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சையில் 75.5% மாணவர்கள் சித்தி பெற்றமையும் மேற்கோள் காட்டத்தக்கது. தன்னுடைய கனவுகளை சுருக்கிக் கொள்ளாத அதிபர் பாஹிம் அவர்கள் “தான் கல்வி கற்ற கொழும்பு சாஹிரா கல்லூரியை போலவே என் கல்லூரியையும் மாற்றியமைப்பேன்” என்ற வேட்கையின் வெளிப்பாட்டால் மீண்டும் ஒரு மாபெரும் வெற்றியை நோக்கி பாடசாலையை கொண்டு சென்றார். இதன் விளைவாக பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக 2018ம் ஆண்டு க.பொ.த உயர்தர கலைப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இதை தொடர்ந்து, கஹவத்தை முஸ்லிம் வித்தியாலயம் என்றிருந்த பாடசாலை “கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம்” என்று பெயர் பெற்று பாடசாலை வகைகளில் தரம் உயர்த்தப்பட்டது.

பல ஆசிரியர்களின் உழைப்பாலும், வழிகாட்டலாலும் பாடசாலையின் வரலாற்றில் முதன் முறையாக 2020ம் ஆண்டில் க.பொ.த (உ/த) கலைப்பிரிவில் மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியதோடு 90% மாணவர்கள் சித்தி பெற்றமையும் ஒரு மாணவன் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற்றமையும் பாடசாலை சரித்திரத்தில் பதிக்கப்பட்டதொரு மாபெரும் வெற்றியே.

2009 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதியில் பாடசாலையின் முக்கியமான பெறுபேறு அடைவுகளின் வீதம் பின்வருமாறு : புலமைப்பரிசில் பரீட்சை அடைவுகள் 2009 – 79.9%, 2011 , 77.9%, 2015 – 78.6 %, 2017 –78.9%, 2018,2019 – 89.9% க.பொ.த (சா/த) அடைவு வீதம் 2017 – 78.5%, 2018 – 75.5%, 2019,2020 – 78.9% க.பொ.த (உ/த) அடைவு வீதம் 2020 – 90% இவ்வாறான கல்வியியல் ரீதியில் வெற்றிகள் தன்வசப்படுத்துவது மட்டுமன்றி தன் வெற்றிகளை பாடசாலை மட்டங்களில் நடைபெறும் போட்டிகள், அகில இலங்கை ரீதியில் நடைபெறும் போட்டிகள் என இணைப்பாட விதான செயற்பாடுகளோடும் மாணவர்கள் அகில இலங்கை ரீதியிலும் முதலிடங்களை பெற்று மேலும் தன் வெற்றியை வலுப்படுத்திக்கொண்டுள்ளது.

வெல்லும் வரை குதிரை வேகத்தில் ஓடு. வென்ற பின் குதிரையை விட வேகமாக ஓடு என்ற வெற்றி வாசகத்திற்கேற்ப 2019 வரையில் விளையாட்டு ரீதியான பக்கத்திற்கு மாணவர்களை ஈடுபடுத்த முடியவில்லையென்றதொரு இடப்பற்றாக்குறை நிலவியதால், 2020ம் ஆண்டிலிருந்து மாணவர்களுக்கு ஆசிரியர் புத்திக திஸாநாயக்க என்பவரின் வழிகாட்டல்களுக்கும் பயிற்சிக்கும் அமைவாக

தற்காப்புக்கலையில் " தைகொண்டோ" என்றதொரு உட்கள விளையாட்டின் ஊடாக பல வெற்றிகளை இந்தப்பாடசாலை சுவீகரித்தது.

அந்தவகையில் 2020, 2021 ஆகிய வருடங்களில் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றி பெற்றமை பாடசாலையின் கீர்த்தியை உள்ளூர் தரத்திலிருந்து உலக தரத்திற்கு கொண்டு சென்றது. தன் தடைகளை படிகளாக மாற்றி அதில் வெற்றி நடை போட்டுக்கொண்டிருந்த கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயத்திற்கு 2022 மீண்டுமொரு சர்வதேச அளவிலான வெற்றி தற்காப்புக்கலையில் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. அண்மைக்கால வெற்றிகளாக 2020ம் ஆண்டு க.பொ.த (சா/த)பரீட்சையில் 9A சித்திகள் பெற்றிருந்தமை மற்றும் விளையாட்டு துறையில் மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இடங்களை பெற்றுக்கொண்டமையும், பல்கலைக்கழக தெரிவும் குறிப்பிடத்தக்கவையே.

2009 தொடக்கம் இன்று வரையில் வெற்றியை நோக்கிய பயணத்தை தொடரும் கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலய பாடசாலையானது குறுகியதொரு காலத்தில் அபிவிருத்தியடைந்து பல மாணவர்களை சாதனையாளர்களாகவும், சமுதாய மாற்றத்திற்கான விதைகளாகவும் தூவி விட்டு விருட்சமாக காட்சியளிக்கிறது. அன்று முதல் இன்று வரை அதிபராக இருந்து பாடசாலையை பல கோணங்களில் வெற்றியை நோக்கி பயணிக்க வைக்கும் அதிபர் திரு. எம்.எம்.எம். பாஹிம் அவர்களுக்கும், இன்று 17 ஆசிரியர்களினுடைய அயராத உழைப்போடு இயங்க செய்த நல்ல உள்ளங்களுக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்று 4 ஆசிரியர்கள் 51 மாணவர்களை கொண்டு கஹவத்தை என்ற சிறு பிரதேசத்தில் ஒரு கட்டிடத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கஹவத்தை முஸ்லிம் வித்தியாலயமானது, இன்று 17 ஆசிரியர்களையும் 300ற்கு மேற்பட்ட மாணவர்களையும் கொண்டு பாலர் வகுப்பு முதல் உயர்தரம் வரையில் இருப்பதோடு இரு மாடி கட்டிடங்களோடு தேசிய ரீதியிலான இடங்கள் மட்டுமின்றி சர்வதேச ரீதியிலும் வெற்றி இடங்களை பிடித்து "கஹவத்தை முஸ்லிம் மகா வித்தியாலயம்" என்ற பெயரோடு தலைநிமிர்ந்து நிற்கின்றது. இந்த வெற்றி திடீரென உருவானதொன்றல்ல. பல்வேறு காலகட்டங்களினுடைய மக்களின், ஆசிரியர்கள், அதிபர்களினுடைய உழைப்பும் வழிகாட்டலுக்கும் மாணவர்களின் முயற்சியினதும் ஒட்டு மொத்த கலவையே இந்த வெற்றி.

பல கட்டங்களில் சிக்கல்களை எதிர்கொண்டாலும் அத்தனையையும் எதிர்த்து நின்று தடைகளை உடைத்தெறிந்து, தன் மேல் எறியப்பட்ட கற்களை பொறுக்கி இன்று அதை கொண்டே ஒரு "மகா வித்தியாலயத்தை" உருவாக்கியுள்ளதே" இதை விட வேறு வெற்றியுண்டோ? நான் கஹவத்தை முஸ்லிம்



மகா வித்தியாலயத்தினுடைய மாணவனாக கற்று இன்று இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பொதுத்துறை நிர்வாகவியல் மற்றும் அரசறிவியல் விஞ்ஞான பீடத்தின் சிரேஷ்ட துறையில் கல்வியை தொடரும் எனது வெற்றிகளிலும் , இந்த பாடசாலையிலிருந்து கற்று சமுதாயத்திற்குள் நுழையும் ஒவ்வொரு மாணவனின் வெற்றிக்கு பின்னும் இந்த பாடசாலையின் பங்கு நிச்சயம் இருக்கும் என்பதே உண்மை.

எம் பாடசாலையை பற்றி துணிந்தெழு சஞ்சிகையில் பதிப்பித்தமையை எண்ணி அகம் மகிழ்கிறேன். சாதரணமாக உருவாகிய எம் பாடசாலை இன்று சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனையோ விதைகள் விருட்சமாகும் வரை காத்துக்கொண்டிருக்கிறது எம் பாடசாலை. நன்றி சுரந்த நெஞ்சத்தோடு முற்றுப்புள்ளி வைக்கிறேன் எம் பாடசாலையின் இதுவரையில் உள்ள சரித்திரத்திற்கு. எம் பாடசாலையின் வெற்றிகளுக்கும் சரித்திரத்திற்கும் என்றுமே காற்புள்ளிகள் தான். இறை ஆசிர்வாதத்தோடு நிவர்த்தி செய்கிறேன். வானமா உன் எல்லை என்றால் இல்லை அதையும் தாண்டிப் போவோம் வா என்பது போல தொடரட்டும் இந்த பாடசாலையின் வெற்றிப்பயணங்கள்.......

யதார்த்த கனவுகளுடன், ஆர். எம். மனாஸ் B.A (Reading) in South eastern university of srilanka, B.SC in psychology (Reading),HNDA in Human resource management (Royal academy), Diploma in Educational Administration and Management ( IOPS)

தகவல்கள் வழங்கியோர்
அதிபர் M.M.M. பாஹிம்
பாடசாலை சம்பவத்திரட்டு

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 24 | 10 நவம்பர் 2022



# அதிசயப் புதல்வன்



சு.கா.அதீதன்,
ஈரோடு - இந்தியா

அன்று சித்ரா பௌர்ணமி. இரவு சாப்பாட்டு நேரம். ரதி மற்றும் ராஜ் இருவருக்கும் சாப்பாடு ஊட்டுவதற்காக அவர்களுடைய அம்மா நிலவைக் காட்டி கதை கூறிக்கொண்டு இருந்தார். ரதி தொடர்ந்து அழுது கொண்டே இருந்ததால் ராஜ் மியாவ் வருகிறது என்று பயமுறுத்துகிறான். உடனே அம்மா மியாவ் வந்தாலும் பயப்பட ஒன்றுமில்லை. நிலா பாரு நிலா பாரு தனியாக தான் இருக்கு பயப்படாமல் தைரியமா இருக்குன்னு கூறினார். நீங்களும் தைரியமா இருக்கணும்னு தன்னுடைய பிள்ளைகளுக்கு அறிவுரை கூறினார்.

இருவரும் அம்மா ஊட்ட ஊட்ட சாப்பாடு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். திடீரென ராஜ் நிலாவையே பார்த்துக்கொண்டிருந்தான். நிலவிலிருந்து ஒரு ஏணிப்படிகள் மாதிரி இறங்கி வருவதைக் கண்டான். உடனே அந்த ஏணிப்படிகளில் ஏறி நிலாவைச் சென்றடைய முற்பட்டான். ராஜ்வைச் சுற்றி இருந்த அம்மாவிற்கோ அவர்களுடைய நண்பர்களுக்கோ அந்த ஏணிபடிகள் தெரியவில்லை. ராஜ்விற்கு மட்டும் தான் தெரிந்தது.

ராஜ் மேலே ஏறுவதைப் பார்த்த அவருடைய அம்மா தன்னுடைய மகள் தனியாக சொல்கிறானே என்று தானும் வருவதற்கு முற்படுகிறாள். மகன் மட்டும் தனியே ஏறுகிறான். எப்படி ஏறுவது என்ன செய்வது என்று புரியாமல் தயங்கி நிற்கிறாள். கணவர் தனியே இருந்தாலும் சமாளித்துக் கொள்ள முடியும். ஆனால் என் மகன் சிறுவன். அவனுக்கு என் உதவி வேண்டும் என்று நினைத்து மேலே ஏறி செல்ல முற்படுகிறாள். ஆனால் அதற்குள் ராஜ் நிலவைப் சென்றடைந்து விட்டான். நிலவை ராஜ் அடைந்ததும் அம்மாவிற்கோ மற்றவர்களுக்கோ இதுபற்றிய எந்தவித நினைவும் எழவில்லை.

நிலவை அடைந்ததும் பெரும் மகிழ்ச்சி ராஜ்வுக்கு. மகிழ்ச்சியில் நடனம் ஆடுகிறான். அனைவரது பெயர்களையும் சத்தமாக உரக்கக் கத்திக் கொண்டே கூறுகின்றான். ரதி... ராஜ்... அம்மா... அப்பா... என்று மகிழ்ச்சியில் ஆனந்த தாண்டவம் ஆடுகிறான். நிலவில் உயிர்வாழ ஆக்சிஜன் இல்லை நீர் இல்லை என்றெல்லாம் படித்தது நினைவுக்கு வந்தது. ஆனால் இங்கு எல்லாம் இருக்கிறதே என்ன இது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது வெள்ளை ஆடையில் ஒரு தேவதை இவன் கண்ணுக்குத் தென்பட்டது. அந்த தேவதை எங்கே நீ வந்தாய்?? எப்படி இங்கு வந்தாய்?? என்று கேட்டது. உடனே ராஜ் எனக்கு ஏணிப்படிகள் கீழே இறங்கி

வந்தது. அதன் மூலம் ஏறி மேலே வந்தேன் என்று சொன்னான்.அப்படி என்றால் நீ ஒரு அதிசயப் பிறவிதான். கோடியில் ஒருவருக்குத்தான் இப்படி ஒரு வாய்ப்பு வரும். அந்த வாய்ப்பு உனக்கு வந்ததால் நீ மிகவும் சிறந்த தலைவனாக தான் திகழ்வாய்!! "என் ஆசிர்வாதங்கள்" என்று வாழ்த்தியது. ராஜ் தேவதையிடம் இங்கே நீர் இருக்காது உயிர் வாழ காற்று இருக்காது என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் இங்கு எல்லாமே இருக்கிறதே என்று கேட்டான். உடனே தேவதை ஆமாம் நீங்கள் ஏற்கனவே பூமி முழுவதும் செயற்கை மயமாக ஆக்கிவிட்டீர்கள் நிலவையும் விட்டுவிடப் போவதில்லை. அதற்காகத்தான் அப்படி கூறி இருப்பார்கள் போல என்று தேவதை பதிலளித்தது.

பிறகு தேவதை இந்த அதிசய நிலவுலகிற்கு நீ வந்ததால் உனக்கு என்ன வரம் வேண்டும் என்று கேட்டது. ராஜ் சிறுபையன். அவனுக்கு என்ன பிடிக்கும் பொம்மைகள் தான் பிடிக்கும். எனவே நான் நினைத்த பொம்மைகள் எல்லாம் எனக்கு உடனுக்குடன் கிடைக்க வேண்டும். அப்பா அம்மாவிடம் கேட்டால் உடனே வாங்கி தர மாட்டேன் என்கிறார்கள் என்று கூறினான். தேவதை புன்னகைத்து அப்படியே ஆகட்டும் நீ மிகச் சிறந்த நல்ல தூய மனம் உடையவனாக இருந்ததால் தான் இந்த இடத்திற்கு வந்திருக்க முடியும். அதனால் நீ நினைக்கும் நல்ல விஷயங்கள் அனைத்தும் உடனே கிடைக்கும் என்று வரமளித்து மறைந்தது.

ராஜ் விளையாடி களைத்து விட்டான். இரவு என்பதால் சிறிது தூக்கமும் வந்தது. வீட்டிற்கு மீண்டும் எப்படி செல்வது என்று யோசித்துக் கொண்டிருந்தான். அந்த சமயம் மீண்டும் நிலவிலிருந்து ஏணிபடிகள் கீழே இறங்கியது. வீட்டிற்கு வந்து விட்டான் ராஜ்.

இதெல்லாம் கனவா என்ன?? உண்மையாக தான் இப்படி ஒரு வரம் கிடைத்ததா? என்று ராஜ்வின் மனதில் ஒரே குழப்பமாக இருந்தது. நடந்ததையெல்லாம் அம்மா அப்பாவிடம் கூறினான். அவர்களும் இதை நம்பவில்லை. இருப்பினும் மகனின் வரம் பற்றி அறியும் போது மகிழ்ச்சியாக தான் இருந்தது அவர்களுக்கும். ராஜ்வின் அம்மாவிற்கு நிலாவிற்கு தன் மகன் சென்ற எந்த விஷயமும் நினைவுக்கு வரவில்லை. ஏதோ கனவு கண்டிருப்பான் என்று எண்ணினாள். யாரும் இதனைப்



பெரிதாக நினைக்காததால் ராஜ்வும் காலப்போக்கில் இதனை மறந்தான். கனவுதான் என்று அவனும் நம்பினான்.

ஆனால் அவர்கள் கனவு என்று நம்பினாலும் நடந்தது என்னவோ உண்மையாகத்தான். நிலவிற்குச் சென்று வந்த அடுத்த நாளிலிருந்து ராஜ் நினைக்கும் அனைத்து விஷயங்களும் ஏதேனும் ஒருவகையில் உடனுக்குடன் அவனுக்குக் கிடைத்தன. அப்படித்தான் ஒருநாள் விளையாட மகிழ்ந்து பொம்மை வேண்டும் என்று ஆசைப்பட்டான். அவனுடைய அப்பாவிடம் கேட்டான். அவர் சம்பளம் வந்ததும் வாங்கி தருகிறேன் என்று கூறினார். அன்று மாலை பொழுது விருந்தினர் ஒருவர் வந்தார். அவர் ராஜ்வுக்கு மகிழ்ந்து பொம்மையைப் பரிசாக அளித்தார்.

அது போல் மற்றொரு நாள் ராஜ் பள்ளி செல்லும் வழியில் ஒரு நாய் காலில் அடிபட்டு இருந்ததைப் பார்த்து அந்த நாயின் கால்கள் சரியாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று எண்ணினான். மாலை பள்ளி முடிந்து வரும் பொழுது அந்த நாயின் கால்கள் சிகிச்சை அளிக்கப்பட்டு சரி செய்யப்பட்டு இருப்பதை அறிந்தான். இதுபோல் அவனுடைய வாழ்க்கையில் தொடர்ந்து அவன் நினைக்கும் அனைத்து விஷயங்களும் நடந்தேற ஆரம்பித்தன.

# அனைத்துலக சாதனை புத்தகத்தில்

## இடம் பிடித்த மலேசியாவை சேர்ந்த சிறுவன்



மலேசியா நாட்டு ஒருங்கிணைப்பாளர்
ஜஸ்ʼரா ஜலீல்

பேச்சாற்றல் மிக்கவரும் சிறுவயது முதல் பல்வேறு கல்வித்துறை சாதனைகளையும் படைத்து சிறந்து விளங்கும் சாதனையாளர் நிமலரூபன் இராஜமாணிக்கம் அண்மையில் இந்தியாவில் இயங்கிவரும் "ஜக்கி புக் ஒவ் வோல்டு ரெகார்ட்ஸ்" அனைத்துலக சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

மாணவர் நிமலரூபன் காப்பார் தேசிய வகை வல்லம்புரோசா தோட்டத் தமிழ்ப்பள்ளியில் 5-ஆம் வகுப்பு படித்து வருகிறார். பேச்சாற்றல் கொண்ட நிமலரூபன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் விருது பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. தேசம் ஊடக சாதனையாளர்கள் தங்க விருது விழாவில் இவர் தமிழ்ப்பள்ளிகளுக்கான சிறந்த மாணவர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கா தமிழ் டிவி இவருக்கு சிறந்த சிறுவன் எனும் விருதினை வழங்கியுள்ளது. மேலும், கலைரத்தின விருது, தமிழ்செல்வர் விருது, தமிழ்த்தாய் விருது, தேசத்தின் சிற்பி விருது, மஹாத்மா காந்தி விருது, கவிஞாயிறு விருது, வீரபாண்டிய கட்டபொம்மன் விருது மற்றும் சாதனை செல்வர் விருது ஆகிய விருதுகளையும் பெற்றுள்ளார்.

ஆகையால், ஜக்கி உலகச் சாதனை புத்தகம் தரப்பினர் இவரை தலைச்சிறந்த இளம் சாதனை நாயகன் என்று அங்கிகரித்துள்ளனர்.






# இலங்கையின் 05 மாகாணங்களும் ஒரே இடத்தில் தெரியும் சுற்றுலாத்தளம்!



எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்

ஒரு காலனித்துவ மரபு ரீதியான வரலாற்றைக் கொண்ட இடமாக "லிப்டன் சீட்"டைக் குறிப்பிடலாம். இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து சுமார் 216 கிலோமீற்றர் தூரத்தில் லிப்டன் சீட் அமைந்துள்ளது. இலங்கையில் ஹப்புத்தளை மிகவும் பிரபலமான இடமாகக் காணப்படுகிறது ஹப்புத்தளை நகரத்திலிருந்து ஒரு மணித்தியால தூரத்தில் (சுமார் 16 கி.மீ) அமைந்துள்ள லிப்டன்ஸ் சீட் என்பது புகழ்பெற்ற "தோமஸ் லிப்டனின்" பெயரால் அழைக்கப்படும் ஒரு பிரபல்யமான இடமாகும். அவர் 1890 இல் பிரிட்டிஷிலிருந்து சிலோனுக்கு குடிபெயர்ந்த ஒரு ஸ்காட்டிஷ் தொழிலதிபர் ஆவார் அவர் அங்கு "ஜேம்ஸ் டெய்லரை" சந்தித்தார் அத்தோடு அவர்கள் இருவரும் ஒன்றாக தேயிலைத் தோட்டங்களை நாட்டிற்கு அறிமுகப்படுத்தினர்.

லிப்டனின் வருகைக்கு முன்னர், டெய்லர் இலங்கைத் தீவில் காபிச் செடியை வளர்க்க முயன்றார் இருப்பினும், காபித் தோட்டங்கள் இலைக்கருகல் நோயால் அழிக்கப்பட்டன. லிப்டனின் உதவியுடன் இருவரும் தங்கள் வாழ்நாளில் வாழக்கூடிய ஒரு வணிக முயற்சியில் இறங்கினார்கள். குறிப்பாக இங்கு லிப்டன் தேனீர் கோப்பையுடன் அமர்ந்து கொண்டிருக்கும் உருவச்சிலை காணப்படுகிறது. அதனாலேயே அதிக சுற்றுலாப் பயணிகள் லிப்டன் அருகே புகைப்படங்களைப் பிடிப்பதற்கும் இங்கு தினம்தோறும் வருகின்றார்கள்.

கூட்ட நெரிசல் மற்றும் அதிகாலை மூடுபனி போன்றவற்றை தவிர்க்க, உரிய நேரத்தில் சுற்றுலா பயணிகள் இங்கு செல்ல பரிந்துரைக்கப்படுகின்றார்கள். அதிகாலையில் சூரியன் உதிக்கும் காட்சி அதே போல் மாலை நேரத்தில் சூரியன் மறையும் காட்சிகள் ஆகாய உட்சியில் இருந்து நாம் பார்க்கும் போது சுற்றுலாப் பயணிகளை மெய்மறக்கச் செய்கின்றன.

இங்கு செல்ல வேண்டிய வீதிகள் செங்குத்தாகவும் மிகவும் அகலம் குறைந்தாகக் காணப்படுகின்றது. நீங்கள் வாகனங்களை கவனமாக ஓட்டமுடியும் என்ற அதீத நம்பிக்கை இருந்தால் அதை அனுபவிக்க வேண்டியதுதான் அவ்வாறு தவறும் பட்சத்தில் இதற்காகவே தேர்ச்சி பெற்ற ஆட்டோ சாரதிகளை இங்கு காணமுடியும். அவர்கள் ஊடக மலை உச்சிக்குப் பயணிக்க முடியும்.

இலங்கையின் 9 மாகாணங்களில் 5 பகுதிகளை அந்த மலை உச்சியிலிருந்து பார்க்கலாம் என்றும் நம்பப்படுகின்றது. இந்த இடம் தம்பேதென்ன தோட்டத்தால் (லங்கன் சிலோன் பிஎல்சி) நிரவகிக்கப்படுகிறது

கார்களுக்கான வாகன தரிப்பிட டிக்கெட்டிற்கு ரூபா. 250.00 அறவிடப்படுகின்றது மற்றும் ஒரு நபருக்கான நுழைவுக் கட்டணமாக ரூபா.100.00 அறவிடப்படுகின்றது. குறிப்பாக இங்கு வரும் சுற்றுலா பயணிகள் இங்கு ஒரு சில குறைகள் காணப்படுவதாகவும் அங்கலாய்கின்றார்கள் மேல்பகுதியில் தண்ணீர் வசதி இல்லை என்பதாகவும் கழிப்பறைகள் பூட்டியே கிடக்கின்றதாகவும் பாதைகளும் சமீபகால சீரமைக்கப்பட வில்லை என்றும் முறைப்பாடு செய்கின்றனர் குறிப்பாக இவைகள் நிவர்த்தி செய்யும் பச்சத்தில் பரிபூரணமான முறையில் எமது சுற்றுலா பயணத்தை திட்டமிடுதலாக அமைக்க முடியும்.

மேலும் நீங்கள் செல்லும் போது அங்குள்ள அலுவலகத்தை தொடர்பு கொள்ள 0575 670 595 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பை மேற்கொண்டு பயணத்தை இலகுவாக அமைத்துக் கொள்ள முடியும்.



# இஸ்லாமும் உளவியலும்



ஷிஹானா நௌபர்
துணிந்தெழு சஞ்சிகை
இணையாசிரியர்

உளவியலை கற்பது நம்மை நாம் உணர்ந்து கொள்வதற்கும். ஈருலக வாழ்க்கையையும் வெற்றிகரமானதாக அமைத்துக் கொள்வதற்கும். நம்மைப் பற்றி நாம் முழுமையாக புரிந்து கொள்வதற்கும் தெரிந்து கொள்வதற்கும் ஆகும்

ஆதி நபி ஆதம் அலை அவர்கள் முதல் இறுதி நொடி வரை வாழ்க்கை வழி முறையை எளிமையான முறையில் நெறிப்படுத்தி தந்த ஒரு அழகிய மார்க்கம் இஸ்லாம் உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக ரீதியான நன்னிலை ஒரு மனிதனுடைய ஆரோக்கியம் எனப்படும்.

"எங்களுடைய உடம்பில் ஒரு சதை பிண்டம் உண்டு அது சீராக இருக்குமானால் எல்லாம் சீராக அமையும் அது சீர் கெட்டு விடுமானால் ஏனைய அனைத்தும் சீர் கெட்டு விடும்" இது ஏக இறைத்தூதர் அவர்களுடைய பொன் மொழியாகும் இதேபோல் புனித குர்ஆனிலும் மனிதனுடைய மனம் அல்லது எண்ணம் பற்றி பல இடங்களில் கூறப்பட்டுள்ளது.

"செயல்கள் அனைத்தும் எண்ணங்களைப் பொறுத்தே" ஆகவே எமது உள ஆரோக்கியத்தைப் பேண வேண்டும். உளவியல் எனப்படுவது ஒரு தனி நபரின் நடத்தை மன செயல்முறைகள் மற்றும் உணர்ச்சிகளின் அறிவியல் ஆய்வு ஆகும் ஆனால் நம் வாழ்க்கை ஆன்மீகத்துடன் இணைந்து காணப்படுகின்றது. எனவே இஸ்லாம் உளவியலை ஆன்மீகமும் இணைந்த கண்ணோட்டத்தில் நோக்குகின்றது. ஆகவே ஆன்மாவைப் பற்றிய ஆய்வு மற்றும் நடத்தை உணர்ச்சிகள், மன செயல்முறைகள் மற்றும் புலன்களுக்கு அப்பாற்பட்டவற்றின் அறிவியல் ஆய்வு தொடர்பான கற்றலாக நோக்கப்படுகின்றது. ஒரு மனிதனுடைய ஆன்மா என்பது உடல் முழுவதும் பரவி இருக்கும் உயிரின் உறுப்பாகும்.
அது உடல் உணர்வுகள்,இயக்கங்கள் மற்றும் விருப்பத்தை இயக்குகின்றது.

இறைவனுடனான நமது உறவு, அறிவாற்றல், நடத்தை மற்றும் உணர்ச்சிகள் நம் ஆன்மாவை பாதிக்கின்றன
எனவே நம்மைப் பற்றி நாம் தெரிந்திருப்பது இம்மை மறுமை வாழ்க்கையின் வெற்றிக்கு பயனளிக்கும்..,

தொடரும்



# இளமையின் இதயமாம் இணையம்

## இளைப்பாற இன்னிசைகளை இயக்குமாம் இணையம்



எம்.ஆர்.எப். சப்ரினா
மாவனல்ல

பார்வைக்கு பரவசமாய் பல படங்களை பிறப்பிப்பதும் இணையமாம்... ஆம், இன்று இள வயது தொடக்கம் பல இன்னல்களுக்கு மத்தியில் தம்மைப் பெற்றெடுத்த தாயின் தாலாட்டு தாழ்வுறும் அளவுக்கு, நம் மத்தியில் இணையம் எழுப்பும் இன்னிசைகள் இடம் பிடித்துள்ளன என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். தந்தையின் சொற்கள் செவியிற்கு செம்மை சேர்ப்பவை என்பதை மறக்கடிக்கும் அளவுக்கு இன்று முழு உலகிலும் இணையம் பல முறைகளில் தாக்கத்தை இளம் சமூகத்தினர் மீது செலுத்தியுள்ளது.

அன்றைய காலத்தில் பிரச்சினை அல்லது ஒரு முரண்பாடு என்றாலே சிறு பிள்ளைகள் தொடக்கம் இள வயதினரும் ஓடிச்செல்வது மாதாவின் மந்திரமடியை நோக்கியே... ஆம், நான் இவ்வாறு குறிப்பிடும் போது வாசகர்கள் மனதில் "மந்திரமடியா"! என ஒரு கேள்வி எழும் என்பதில் ஐயமில்லை.

எத்தனை பிரச்சினைகளாயினும் அவற்றை ஒரு நொடியில் நெகிழ்வடையச் செய்யும் தாயின் மடியை, "மந்திரமடி" என்று குறிப்பிடுவதில் தவறில்லை என நான் கருதுகிறேன். ஆனால், இன்றைய உலகில் இணையத்தின் இணக்காப்பாட்டின் விளைவாக, இனிய உறவுகளெல்லாம் நம் இமைகளுக்கு இடர்களாகவே தெரிகின்றன அல்லவா...???? ஆம், இவ்வாறு கூறும் போது இல்லை என்று கூற ஏங்கும் சில உள்ளங்களுக்கு மத்தியில் "ஆமாம்" என்று கூறும் உள்ளங்களே பலக் காணப்படும்.

இவ்வாறான ஒரு நிலை சமூகத்தில் உருவாகக் காரணம் சிறியோர் தொடக்கம் இள வயதினர் அனைவரும் இணையத்திற்கு அடிமைகளாவதலாகும். எனினும், இதை மனதால் உணரும் பக்குவம் பல பேரிடம் காணப்பட்டாலும் தான் இணையத்திற்கு ஒரு அடிமை அல்லது தொலைப்பேசிக்கு ஒரு அடிமை என்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமைக்கு இரண்டு காரணங்களை குறிப்பிடுகிறேன்.


முதல் மூலக்காரணம் நாம் இணையம் அல்லது நம் தொலைப்பேசி மீது கொண்டிருக்கும் அதீத ஆர்வமாகும். இரண்டாவது காரணி, இணையம் அல்லது தொலைப்பேசியை விட்டு தன்னால் வாழ இயலாது என நாமே உள்ளத்தில் உருவாக்கிக் கொள்ளும் போலியான பிரம்மையே நான் மேலே குறிப்பிட்ட அந்த விடயத்தை மறுக்கச்செய்யும் இரு காரணிகளாகும்.

ஆம் வாசகர்களே, இவ்வாறு முடங்கி கிடக்கும் இலங்கை இளம் சமுதாயம் மாத்திரம் அல்ல, எல்லா திசையில் வாழும் மானிடர்களும் இணையத்திற்கு அல்லது தொலைப்பேசிக்கு அடிமையாவதை தவிர்க்கலாம். ஆரம்பத்தில் நான் இவ்வாறு கூறினால் கேலியாக சிரிக்கும் வாசகர்களும், உங்களுக்கு மத்தியில் இருக்கலாம் என நான் எண்ணுகிறேன்.

இருந்தாலும், "ஒரு மானிடனால் எப்போது தான் மற்றும் தன்னைச் சுற்றியுள்ள சூழலையும் அதனைச் சூழவுள்ள உயிரினங்களையும், உறவுகளையும் முன்னுரிமைப் -படுத்துகிறானோ, அத்தருணம் ஒரு மானிடன் தன் முன்னே இருக்கும் இணையத்தையும், தொலைப்பேசியையு -ம் ஒரு பொருளாய் கருதுவானே தவிர தன் வாழ்வின் பொக்கிஷமாய் கருத மாட்டான். எனவே, இன்றிலிருந்து இணையத்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டு, அகிலத்தின் அற்புதங்களை அனைத்து திசைகளில் இருந்தும் அனுபவிக்க அழகிய வாழ்த்துக்களை என் அன்பின் வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இணையம் தொலைப்பேசியின் அடிமைத்தனத்திலுருந்து விடுபடுவோம்!!! அகிலத்தின் அற்புதங்களை அனுபவிப்போம்!!!





# எறும்பின் முகத்தைப் புகைப்படம் எடுத்த கலைஞருக்கு விருது

ஜப்பான் தலைநகர் டோக்கியோவை தலைமையகமாக கொண்டு இயங்கி வருகிறது பிரபல கேமரா தயாரிப்பு நிறுவனமான நிக்கோன். இந்த நிறுவனம் கடந்த 1975ம் ஆண்டு முதல் 'Nikon Small World Micrography' என்ற புகைப்படப் போட்டியை நடத்தி வருகிறது. இதில் புகைப்படக் கலைஞர்கள் பலர் கலந்துகொண்டு `Light Micrography' போன்ற கேமரா லென்ஸ்களைப் பயன்படுத்தி நுண் உயிர்களை அல்லது மிகச்சிறிய நுண் பொருட்களைப் புதுமையான முறையில் புகைப்படம் எடுத்து போட்டிக்கு அனுப்புகின்றனர். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த புகைப்படம் மற்றும் சிறந்த புகைப்பட கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கி பாராட்டி வருகிறது நிக்கோன் நிறுவனம்.

அந்தவகையில் 2022 ஆம் ஆண்டிற்கான `Nikon Small World Micrography' போட்டியில் ஆச்சரியமளிக்கும் வகையில் பல புகைப்படங்களுடன் புகைப்பட கலைஞர்கள் போட்டியில் பங்கேற்றனர். அதில் `Image of Distinction' என்ற தலைப்பில் லிதுவேனியா நாட்டை சேர்ந்த யூஜெனிஜஸ் கவாலியாஸ்காஸ் என்ற வனவிலங்கு புகைப்பட கலைஞரால் நிக்கோன் கேமரா மூலம் ஐந்து மடங்கு Zoom செய்யப்பட்டு எடுக்கப்பட்ட சாதாரண எறும்பின் முகத்தின் க்ளோஸ்அப் புகைப்படம் தான் இது.

சிவந்த கண்கள், நீளமான கூறிய பற்களுடன் கோபப்பார்வை பார்க்கும் எறும்பின் உண்மை முகத்தோற்றம் திகில் திரைப்படங்களை மிஞ்சும் அளவிற்கு பெரிய ராட்சத மிருகத்தைப்போல இருக்கும் இப்புகைப்படம் மக்களிடையே கவனத்தைப் பெற்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 24 | 10 நவம்பர் 2022



# கஷ்டமில்லையேல் இஷ்டம் ஏது?

மலையகத் தென்றல்
மஹ்மூத்

கஷ்டங்களே காணக்கூடாது..
தோல்விகளே இருக்கக்கூடாது.. ஆனால்!
சாதிக்கவேண்டும்.. சரித்திரத்தில் இடம்
பிடிக்கவேண்டும் என்ற ஆசை.. என்ன ஆசை
இது?..

கஷ்டங்களை கடப்பது இஷ்டத்தை அடைவதற்கு..
தோல்விகள் வருவது வெற்றிப்படி ஏறுவதற்கு
என்பது
எம்மில் எத்தனை பேர் அறிந்ததுண்டோ தோழா?..

அன்பனே! அகிலம் போற்றும் அனைத்து
மானிடனும்
ஆயிரமாயிம் தோல்விகளை கண்டவனடா..

அத்துனையையும் அவன் வெற்றிக்கான
ஆயுதமாய் செதுக்கியவனடா..

மனம் தளராதே மானிடா!.. பொறுமை வேண்டும்..
பெருமையில்லா மனம் வேண்டும்.. சகிப்பு வேண்டும்..
சாதிக்கத் துடிக்குமுள்ளம் வேண்டும்..
கணகாலம் காக்க வேண்டும்.. காத்திருப்புக்களை சுகமென
எண்ணவேண்டும்..

எம்முள்ளமதில் என்றும் இருக்க வேண்டும் எப்போதும்
இருக்கவேண்டும் "வெற்றி நிச்சயம்.. அற்கு முயற்சி
முக்கியம்.. அதுவே அந்த வெற்றியின் இரகசியம் என்பது.."

# அன்பு மகனே



அன்பு மகனே ஆசை மலரே
கன்னல் இதழால் கனிமொழி தருவாய்
புன்னகை மலர்கள் பூத்திடும் அழகே
அன்னை நானும் அணைத்திட வந்தேன்

மொட்டாய் மலர்ந்த முழுமதி நிலவே
சிட்டாய்ப் பறக்கும் கட்டிக் கரும்பே
பஞ்சு மேனியில் பட்டினை உடுத்தித்
துஞ்சிட நீயும் தூளி செய்தேன்

தவத்தில் உதித்தாய் தங்கச் சிலையே
அவனியில் உனக்கு இல்லை விலையே

தாயாய் உன்னால் தரத்தில் உயர்ந்தேன்
சேயாய் வந்தாய் சிரிக்கும் செல்லமே

முத்துப் பல்லும் மழலைச் சொல்லும்
சொத்தாய்ச் சேர்த்தேன் சுந்தர ஒளியே
தோளில் ஏறிடும் பட்டாம் பூச்சியே
தோரணமாய் ஆட்டிட மலர்ந்தாய் முல்லையே

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்



# எழுத்தாளன் - போராளி



வானம்பாடி முஜா.
இலங்கை.

ஒவ்வொரு எழுத்தாளனும் ஒரு போராளி தான்.
தன் உணர்வுகளோடு போராடியே
தனிப்பெரும் படைப்பொன்றினை காட்சிப்படுத்துகிறான்.

அந்த போராளிகளின் இன்றைய நிலைதான் என்ன?
தனக்கென ஒரு அடையாளம் கிடைத்தால்
போதுமெனவும் தனக்கெதற்கு வம்பெனவும் இன்றைய
சமூக சிக்கல்களையும் யதார்த்த வாழ்வியலையும் தன்
படைப்பில் கொண்டுவர மறந்தவர்களாக ஏதோ ஒரு
கருப்பொருளை நகர்த்திப்போகும் அவர்களது
பேனையின் கூர்மை பற்றி கொஞ்சம் சிந்திக்கவும் சற்று
துலக்கிப் பார்க்கவும் தேவையான காலம் இது.

பொதுவாக இலக்கியம் என்பதை
"காலத்தின் கண்ணாடி" யென்றே அழைப்பர்.
அவ்வாறெனில்
எமது இலக்கிய பாண்டித்தியம் நாம் வாழ்ந்த காலத்தை
சித்தரிப்பதாகத்தானே அமைதல் வேண்டும்.

ஏன் இன்று விரல்விட்டு எண்ணும் சிலரைத் தவிர
ஏனையவர்களது படைப்புகள் தற்கால சூழ்நிலையை
விபரிப்பதாகவும்,
எதிர்த்து கோசங்களெழுப்புவதாகவும் அமைவதில்லை.

அத்தோடு யாராவது ஒருவர் துணிந்து எழுதினால் அங்கு
சென்று "எதுக்கு இந்த வேண்டாத வேலை நாளை
உங்களையும் சிறையிலடைப்பர் கைதுசெய்வர்"
என்ற பரிதாப வசனங்களை பொழிந்து விடுபவர்களை
தான் பெரும்பாலும் காண முடிகிறது.

இதுவா எமது சிறந்த பணி?

எழுத்தாளனின் கருத்து அல்லது சிந்தனைச்
சித்தரிப்பினால் ஒரு நாடோ சமூகமோ சிறப்பாக
இயங்கும் என்பதே உலக வரலாறு.
உலகின் அனைத்து விடுதலைப் போராட்ட
சிந்தனைகளும் பேனையின் துடிப்பில் பிறந்ததுவே,

இன்று இந்த நாடு எதிர்நோக்கும்
சவால்களுக்கும் விட்ட
பெரும் பிழைகள் ஒரு காரணம் நாமென்றே கூறுவேன்.
தட்டிக் கேட்க வேண்டிய சில காலப்பகுதியில் நெஞ்சை
நிமிர்த்திக் கேள்விகள் கேட்கப்பட்டிருந்தால்
ஆட்சியாளனும் திட்டங்களில்லா அமைச்சரவையும் கண்
விழித்திருந்திருக்கும்.

ஒரு கை தட்டுவதை வேடிக்கை பார்த்த காலங்கள்
மாறட்டுமே. சேர்ந்து குரல் கொடுங்கள்
உங்கள் சிந்தனை ஒரு நாட்டையோ ஒரு
சமூகத்தையோ அல்லது ஒரு தனிநபரையோ
புத்தியில் குட்டி நிறைவுபடுத்துமாயின்,
அதுவே ஒரு எழுத்தாளனின் வெற்றி உன்னத வெற்றி!



# தோல்வி என்றால்... என்ன ?

கவிதை தோழி....
ஆஷிகா இஸ்ஸதீன்

தோல்வி என்றால் நீங்கள் தோற்றவர் என்று
பொருள் அல்ல. நீங்கள் இன்னும்
வெற்றி பெறவில்லை என்று பொருள்.

தோல்வி என்றால் நீங்கள் எதையுமே
சாதிக்கவில்லை என்று பொருள் அல்ல. சில
பாடங்களைக் கற்றுக்கொண்டு
இருக்கின்றீர்கள் என்று பொருள்.

தோல்வி என்றால் நீங்கள் அவமானப்பட்டு
விட்டதாக பொருள் இல்லை.
முயன்று பார்க்கும் துணிவு
உங்களிடம் உள்ளது என்று பொருள்.

தோல்வி என்றால் வாழ்க்கை வீணாகி
விட்டதாகப் பொருள் இல்லை. மீண்டும் ஆரம்பிக்க ஒரு
வாய்ப்புக் கிடைத்துள்ளது என்று பொருள்.

தோல்வி என்றால் விட்டு விட
வேண்டும் என்று பொருள் அல்ல இன்னும்
செம்மையாக உழைக்க வேண்டும் என்று பொருள்.

தோல்வி என்றால் உங்களால் அடைய
முடியாது என்று பொருள் அல்ல அடைய
கொஞ்சம் காலம் தாமதமாகலாம் என்று பொருள்.

தோல்வி என்றால் கடவுள் உங்களைக் கை
விட்டு விட்டார் என்று பொருள் இல்லை. உங்களுக்கு
வேறு நல்ல எதிர்காலத்தை நிர்ணயம் செய்து வைத்து
இருக்கிறார் என்று பொருள்.. முக மலர்ச்சியோடும்,
நம்பிக்கையுடனும் எழுந்து புதிய நாளை துவங்குங்கள்!

# துணிந்தெழு



தூரங்கள் உன்னை பிரிக்கலாம்
துயரங்கள் உன்னை துரத்தலாம்
தூண்டல்கள் உன்னை கிழிக்கலாம்
துவண்டு விடாதே துணிந்தெழு.

பாசங்கள் அணைக்கலாம்
பார்வைகள் குத்தலாம்
பகைமையும் சேரலாம்
பயந்து விடாதே
பணிவுடன் பறந்திடு.

கேலிகள் கைகுலுக்கும்
வேலிகள் உன்னை தடுக்கும்
நக்கல்கள் கண்ணடிக்கும்
தயங்கி விடாதே
தைரியமாய் நடை போடு.

ஊராரும் உன்னை பேசும்
உற்றாரும் உன்னை ஏசும்
நட்புகளும் நகைப்பு தரும்
முடங்கி விடாதே முன்னேறு.

அம்ஸா ஷகீல் அமீர்
பேருவளை



# சாவி



புதுகை சிக்கந்தர்
இந்தியா

நம்மிடம் இருக்கும் விரல்களில் ஒன்றை துண்டித்து தேவைக்கு பயன்படுத்துகிற ஆற்றலை பெற்றிருப்பதை போலதான் நமது விரல்களுக்கிடையில் சாவியொன்று முளைத்திருப்பதை உணரமுடிகிறது அதனால்தான் நமது உடலிலிருந்த ஒரு பாகத்தை இழந்ததை போன்று சாவியை தொலைத்துவிட்டாலோ, வைத்த இடத்தை மறந்துவிட்டாலோ மன உளைச்சலுக்கு ஆளாக்கப்படுகிறோம்..

எகிப்தின் வடபகுதியான அஸ்ஸிரியாவில்தான் முதன்முதலில் மரத்திலான பூட்டு சாவியை பயன்படுத்தியிருக்கிறார்கள் பிறகு காலப்போக்கில் அறிவியல் அறிவு வளர்ச்சியடைந்த நிலையில் 1700களில் பல்வேறு வகையிலான பூட்டுகளும் சாவிகளும் ஒன்றன்பின் ஒன்றாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது..

வளர்ப்பு யானையின் காலில் அங்குசத்தை வைத்துவிட்டு போனால் யானையானது தனது நடையை மேற்கொண்டு தொடராதிருப்பது போன்று வடிவத்திலும், எடையிலும் சிறிய அளவில் இருக்கக்கூடிய சாவியின் கட்டளைக்கு கட்டுப்பட்டு நம்பகத்தனமான பாதுகாப்பை பூட்டு நமக்கு வழங்குகிறது...

பொருந்திப்போகாத சாவி ஒருபோதும் பூட்டை திறப்பதில்லை அதைபோன்றே மனிதர்களும் தன்னை ஒன்றின்மீது பொருந்திக்கொள்ளாத வரை முரண்பட்ட நிலைக்கு ஆளாகி எல்லாவற்றிலுமிருந்து விலகிக்கொள்கிறார்கள்..

நமது அன்றாட நினைவுகளில் முதலில் வருவது சாவியை எடுத்துக்கொண்டோமா என்பதே, அது வாகனங்களுக்குரியதோ, அலுவல்கள் சார்ந்தோ, நாம் சேமித்து வைத்தவற்றின் பாதுகாப்பு குறித்தோ எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். விரல்நகம் அளவில் தொடங்கி பலவிதமான நீள, வடிவங்களில் பயன்படுத்துகிற நாம் சாவியை எண்களாக்கியிருக்கிறோம், குரல், கைரேகை, விழிரேகை, முகமென்று நம்மையே சாவியாய் மாற்றியிருக்கிறோம் இந்த விஞ்ஞானத்தின் நிர்பந்தங்களுக்கு சம்மதித்து.

பொறாமை குணங்களை அதனால் உருவாகும் தீய எண்ணங்களை, வெறுப்பு மனநிலையை, பகைமை உணர்வுகளை வெளியேற்றக்கூடிய மனிதமெனும் சாவியை பெரும்பாலானோர் பயன்படுத்தாமல் இருப்பதால்தான் இந்த சமூகம் வாழ்க்கை குறித்த அச்சத்தை அதிகப்படுத்துகிறது.

ஒற்றுமையெனும் சாவியை பத்திரப்படுத்தியிருக்கும் வரைதான் நமக்கு நிகழும் நிகழ இருக்கும் ஆபத்துகளிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்..



# வளர்ந்துவரும் பிரபல இளம் வனவிலங்கு புகைப்படக் கலைஞர் ரசீம்



ஐ.எம். மிதுன் கான்
கெக்கிராவ

**உங்களைப்பற்றிய ஓர் சிறிய அறிமுகத்தை தரமுடியுமா?**

எனது பெயர் ரசீம். நான் மூதூரை பிறப்பிடமாக கொண்டவன். தற்பொழுது NGO ஒன்றில் Video Production Officer ஆக வேலை செய்து வருகிறேன்,

**புகைப்பட துறையில் நீங்கள் உள்வாங்கப்படுவதற்கான காரணம் என்ன?**

இயற்கை மற்றும் வனவாழ் விலங்குகள் குறித்து எனக்கு சிறுவயதிலிருந்தே ஆர்வம் இருந்துவந்தது. 2013 ஆண்டு நான் A/L எழுதிவிட்டு வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் எனது கைத்தொலைபேசியினை பயன்படுத்தி பல புகைப்படங்களை எடுத்து எனது முகநூலில் பதிவேற்ற ஆரம்பித்தேன். எனது ஊரில் இருக்கின்ற குருவிகள், சிறிய மிருகங்கள், இயற்கை காட்சிகள் என்பவற்றையே அதிகம் படம் பிடித்து பதிவேற்றி வந்தேன். அப்படி ஒரு நாள் நான் பதிவேற்றிய குளத்தில் நின்றபடி இருந்த ஒரு குருவியின் புகைப்படம் முக நூலில் வைரலாகியதொடு பத்திரிக்கை ஒன்றிலும் பிரசுரமாகியிருந்தது. அதைப்பார்த்ததும் எனக்குள் இருந்த புகைப்பட துறை சார்ந்த ஆசை அதிகரித்து மேலும் பல வித்தியாசமான புகைப்படங்களை எடுக்க வேண்டும் என்ற அவா என்னில் எழுந்தது. பின்னர் கேமரா ஒன்றை வாங்கி அதனூடாக புகைப்படங்களை எடுத்து முகநூலில் பதிவேற்ற ஆரம்பித்தேன்.

**இந்த துறையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் பற்றி சொல்ல முடியுமா?**

ஆரம்ப காலங்களில் நான் போட்டோக்கள் எடுக்க ஆரம்பித்தபோது எனது பிரதேசத்தில் இருக்கும் பலர் என்னை ஒரு வகையாகவே பார்த்தார்கள். கிண்டல் அடிக்கவும் செய்தார்கள். குறிப்பாக நான் wild life Photography இல்






ஈடுபடும்போது என்னை ஏளனமாக பார்த்தார்கள். தொடர்ச்சியாக காட்டுக்குள் இருப்பதாகவும், காட்டில் வாழ்ந்துவருதாகவும் பல வகையிலும் பேசினார்கள். ஆனால் இன்று அந்த கதைகள் மறைந்துபோய் அவர்களே என்னை பாராட்டுகின்றார்கள். அதேபோல நான் எதிர் நோக்கிய முக்கிய சவால்களில் ஒன்று தான் பொருளாதார பிரச்சினை. ஆரம்ப காலங்களில் என்னிடம் சரியானதொரு கேமரா இருக்கவில்லை. மூன்று வருடங்கள் நான் உழைத்து சேமித்த சேமிப்பிலிருந்து தான் wild life photography இற்கு பொருத்தமான கேமராவினை வாங்கினேன். அதேபோல போக்குவரத்து சிரமம், அதற்கு ஆகும் செலவுகள் என்பன எனக்கு பெரிதும் சவாலாக இருந்தது. எனது உழைப்பில் நான்கில் மூன்று பங்கை இவற்றுக்காக செலவளித்தேன். அதே போல மொழிப்பிரச்சினையும் எனக்கு இருந்தது. சிங்கள பிரதேசங்களில் புகைப்படம் எடுக்க செல்லும்போது மொழில் தெரியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றேன். தற்பொழுது மொழியினையும் சற்று கற்றிருக்கின்றேன்.

**எப்படியான போட்டோக்களை எடுப்பதில் நீங்கள் அதிக ஆர்வம் செலுத்துகின்றீர்கள்?**

வித்தியாசமான மிருகங்கள், வித்தியாசமான பறவைகள் தேடி தேடி போட்டோ எடுப்பதில் தான் நான் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகிறேன். அதிலும் குறிப்பாக பறவைகள். பறவைகளின் செயற்பாடுகளை அவதானித்து போட்டோக்களை எடுப்பதில் நான் அதிகம் கவனம் செலுத்துகிறேன். இலங்கைக்கு ஒரு பருவத்திற்கு மட்டும் இந்தியாவிலிருந்து வருகை தரும் “பிளமிங் கோஸ்” எனப்படும் ஒரு பறவையை பற்றி கேள்விப்பட்டேன். அது ஜனவரி தொடக்கம் மார்ச் வரையிலான காலப்பகுதியில் மாத்திரமே இலங்கையில் இருக்கும். இவ்வருடம் குறித்த பறவை இலங்கை வருகை தந்திருந்த நேரம் மன்னார் பகுதிக்கு சென்று அவற்றை புகைப்படம் எடுத்தேன். பறவைகள் மீதான எனக்குள்ள காதலை அப்புகைப்படங்கள் உணர்த்தும்.

**Wild Life Photography இல் ஏதேனும் மறக்க முடியாத அனுபவங்கள், சம்பவங்கள் உண்டா?**

ஒரு முறை யானைகளை படம் பிடிப்பதற்காக காட்டுக்குள் சென்ற வேலை என்னையும் எனது நண்பர் ஒருவரையும் யானை துரத்தியது மறக்க முடியாத ஒரு சம்பவம். யானையை நேருக்கு நேராக நின்று படம் எடுத்துக்கொண்டிருக்கையில் கோபமடைந்த யானை எங்களை துரத்த ஆரம்பித்துவிட்டது. கடுமையான பயத்துடன் அன்று தப்பி வந்தோம். அதேபோல மன்னார் பிரதேசத்தில் “பிளமிங் கோஸ்” பறவையினை படமெடுக்க சென்ற சந்தர்ப்பத்தில், குறித்த தினத்தன்று காலை 7 மணிமுதல் 9 மணிவரை குளத்திற்குள் நெஞ்சுப்பகுதிவரை நீர் மட்டம் நிரம்பியிருக்க எந்தவொரு அசைவுமில்லாமல் நின்று குறித்த பறவையினை படம் எடுத்து விட்டு வரும்போது என்னைக்கண்ட அந்த ஊர் மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் ஆச்சரியத்திற்கு காரணம் என்று அவர்களை கேட்டபோது அவர்கள் சொன்ன பதிலில் நான் ஆச்சரியப்பட்டுப்போனேன்! அவர்கள் சொன்ன பதில் மனிதர்களை வேட்டையாடும் முதலைகள் அக்குளத்தில் இருப்பதாகவும் இதற்கு முதல் பலரை வேட்டையாடி இருப்பதாகவும் கூறினார்கள். இந்த குளத்திலா இரண்டு மணித்தியாலங்கள் இறங்கி நின்றேன் என எண்ணியபோது குலைநடுங்கிப்போனது.









**இந்த துறையில் உங்கள் வருமானம் எப்படி? திருப்திகரமான வருமானம் கிடைக்கின்றதா?**

Wild Life Photography யினை பொறுத்த வரையில் வெளிநாடுகளில் அதிக வருமானங்களை ஈட்டக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அது இலங்கையை பொறுத்தவரையில் எந்தளவு சாத்தியமானது என்று எனக்கு தெரியவில்லை. எனது போட்டோக்களையும் நான் விற்க முயற்சிகள் பல எடுத்துள்ளேன். ஆனால் அவற்றுக்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஒரு போட்டியில் எனது wild life போட்டோ ஒன்று தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக 10,000/- பணப்பரிசு கிடைக்கப்பெற்றது. அவ்வளவுதான். வருமானத்திற்கு அப்பால் இந்த Wild Life Photography இல் எனக்கு கிடைக்கும் திருப்தியானது அளப்பெரியது. புதிய விலங்குகளை காணக்கிடைப்பது, அவற்றின் செயற்பாடுகளை அவதானிக்க முடிவது, காடுகளுக்குள் பயணிப்பது போன்றன எனது மனதுக்கு புதுவகையனதொரு திருப்தியினை தருகின்றது.

**இந்த துறையில் நீங்கள் ஏதேனும் சாதித்துள்ளீர்களா? உங்களுக்கான ஏதேனும் அங்கீகாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளனவா?**

இலங்கை வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஒரு போட்டியில் எனது புகைப்படம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்டது. அதேபோல தனியார் அமைப்புகளால் நடத்தப்படுகின்ற புகைப்பட போட்டிகளில் தேசிய மட்டத்தில், பிராந்திய மட்டத்தில் என 3 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட இரண்டு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அத்தோடு தனியார் நிறுவனம் ஒன்றினால் கலண்டர் அச்சிடுவதற்காக புகைப்படங்களை தெரிவு செய்யும் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் எனது புகைப்படம் தெரிவு செய்யப்பட்டு அந்த கம்பனியினால் அச்சிடப்படும் கலண்டரில் எனது புகைப்படமும் அச்சிடப்பட்டது அதற்காக 10,000/- பணமும் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதேபோல Tik Tok, Facebook, Instagram போன்ற சமூக ஊடகங்களில் எனது புகைப்படங்களை பார்ப்பதற்கென்றே அதிகளவானோர் என்னை பின் தொடர்கின்றார்கள்.

**உங்களது எதிர்கால நோக்கம் என்ன?**

சர்வதேச ரீதியில் நடைபெறுகின்ற Wild Life Photography போட்டிகளில் எனது புகைப்படங்களும் தெரிவு செய்யப்பட்டு எனது பெயர் சர்வதேச ரீதியில் ஒரு Wild Life Photographer ஆக மிளிரப்படவேண்டும் என்பதே எனது பிரதான நோக்கம். அதேபோல எனக்கு photography தொடர்பில் தெரிந்த விடயங்களை இத்துறையில் ஆர்வம்கொண்டுள்ள பலருக்கும் கற்றுக்கொடுக்க வேண்டும் என்பதும் எனது ஆசை.



**இறுதியாக வளர்ந்து வரும் Wild Life Photographer களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

Wild Life Photography யினை பொறுத்தவரையில் எமக்கு நிறைய அனுபவங்கள் இருக்க வேண்டும். ஆகவே தாம் வசிக்கும் சூழலில் இருந்துகொண்டே நாம் அவதானிப்பவற்றை உதாரணமாக சொல்வதென்றால் வீட்டுத்தோட்டத்திற்கு வருகை தரும் அணில்கள், சிறு குருவிகள் போன்றவற்றை ஆரம்பத்தில் போட்டோ எடுத்து தமது திறமையினை வளர்த்துக்கொளுங்கள். அதுவே Wild Life Photography யின் ஆரம்பம்.

இலங்கையினை பொறுத்த வரையில் Wild Life Photography துறைக்குள் பிரவேசிப்பதென்றால் சில செலவுகள் ஏற்படும் அதற்கான ஆயத்தங்களையும் செய்துகொள்ளுங்கள். முக்கியமான விடயம் என்னவென்றால் Wild Life Photography இல் புகைப்படம் எடுப்பது மட்டும் எமது நோக்கமாக இல்லாமல் இயற்கையின் சமநிலையினை பேணுவதிலும் நாம் அக்கறையுடன் செயல்படவேண்டும். இத்துறை தொடர்பான அறிவுரைகள்,

புதிய கேமராக்களை கொள்வனவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் மற்றும் Photography சம்மந்தமான Tips & Tricksகளை எனது சமூக ஊடக வலைத்தள பக்கங்களில் பகிர்ந்தும் வருகின்றேன். ஆர்வம் உள்ளவர்கள் அவற்றின் ஊடாக என்னை தொடர்புகொண்டு உங்களுக்கான இலவச அறிவுரைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்





# அறுவடைக்கு நானெங்கே கதிரறுப்பேன்..!

சினமுற்ற சூரியன் கருவுற்று
செம்பாலை யொன்றைப் பிரசவிக்க
அக்னித் தென்றல் வீசுதடி
ஏர்பிடித்து நானெங்கே நிலமுழுவேன்...?

சூட்டிலே வயல்மேனி வெடித்து
வியர்வைக் குருதி கசிய
நிலமடியில் துமிகூட இல்லையடி
சேனைக்கு நானெங்கே நீர்பாய்ச்சுவேன்...?

விதைநெல் முளை முடங்கி
விதைக்குள்ளே மலடியாக
வேறெவளோ உண்டானால்
அறுவடைக்கு நானெங்கே கதிரறுப்பேன்...?

அனலெல்லாம் சுகத் தென்றலாய்
ஆறுதலுக்கு அள்ளிவீசி நகர
ஒரு மரநிழலும் இல்லையடி
உடல் போர்த்தி நானெங்கே ஓய்வெடுப்பேன்...?

ரீங்கார இசையறுவி பாடியதில்
மீனினங்கள் துள்ளிக்குதித்து ஓடி
இற்றைக்கு வெகுநாளானதடி
தாகத்திற்கு நானெங்கே நா நனைப்பேன்...?

உழவன் உழுவதெல்லாம்
ஒருபிடி வயிற்றுக்குத்தானடி
நிலத்தாயே நீயோ விளையாமல் போனால்
இனியெங்கே நானிரை எடுப்பேன்...?

கண்குளிர கருமுகில் வானை
காலசகாயன் சுழன்றினி
காண்பிக்க மாட்டானடி
கையெடுத்து கும்பிட நானெங்கே கல்லெடுப்பேன்...?

இந்நிலையோ நீடித்தால் இறைவா
இவன் விதியை நீயோ தண்டித்தால்
இக்கணமே மாண்டுபோவேன்
பிறகெங்கே நானுயிர் வாழ்வேன்...?



ஒடைக்கவிஞன்



# காத்திருப்பு!

மின்ஹா பாரூக்.

உன் கைகள் கோர்த்து
உன் தோளில் சாய்ந்து
நீ பூவாய் இருக்க
நான் பட்டாம் பூச்சியாய் மாறி
உன்னை சுற்றி சுற்றி வர,

நீ என்னை நினைக்கும் நொடிகள்
அதில் கூட நான் உன் அருகே இருக்க
எம் சாப்பாடு ஊட்டி விடும் தருணங்களின்
ஆயுள் நீள,

சின்னச் சின்ன சண்டைகள் அதில் நானே
உன்னில் வெற்றி கொள்ள,
இன்னும் அடுக்கடுக்காய் ஆசைகள்!
என் காத்திருப்பு வாழ்வில் கனவாக நீள.

உன் நினைவுத் துளிகள் என்னில்
கண்ணீராய் கரைகிறது. நீளும் இரவுகளில்!

இன்னும் உனக்காய் காத்திருக்க வேண்டும்
என நினைக்கையிலே, ஒரு நாள் ஒரு
வருடமாக நீள் பாதை அமைக்கிறது என்
வாழ்வினில். அன்பே! நான் இங்கே
தனியாகவே தவிக்கின்றேன் நீ இன்றி.

உன் வருகை என் வாழ்வில் பிரகாசித்திடும்
என வழி மேல் விழி வைத்து காத்திருக்கும்
நான் என்றும் உன் இவள்.



# சமூக சீர்க்கேடுகள்

தனி மனிதனின் பங்களிப்பு சமூக மேலுள்ள
அக்கறை எந்த கவலையுமின்றி
கைகள் போன போக்கிலே அலைபேசியோடு
அலைவதில் ஈடுபாடு.

ஒழுக்க நிலை மறந்து தன்னிலை இழந்து
சிந்திக்க நேரமின்றி நாளைய சிந்தனையின்றி
சுற்றித் திரியுது இளைய சமூகம். உலக வளர்ச்சியோ
மின்னலாய் இளையர்களோ
இணையத்தில் பெத்தவர்களோ கலக்கத்தில்
தீயதில் மனதை புகுத்தி சீரழியும் சமூகம்.

மீண்டும் பிறப்பெடுத்து புது உலகம் புதுயுகம் படைக்க
படையெடுத்து வாருங்கள் புதியதோர் உலகம்
சேர்ந்தே உருவாக்குவோம்.
சமூகசீர்க்கேடுகளை கலைந்தெடுப்போம்.

என். சாந்தி.
மலேசியா.



## இலங்கையின் பிரபல கவிஞர், எழுத்தாளர், ஊடகவியலாளர், நிகழ்ச்சி தயாரிப்பாளர், பாடலாசிரியர் என பல்துறை ஆளுமை

# பொத்துவில் அஸ்மின் அவர்களுடனான நேர்காணல்



ஜவ்சன் அஹமட்
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

பொதுவாகவே இறைவன் மனிதர்களை தன்னுள் பெரும் ஆற்றல்களும் திறமைகளும் உள்ளவர்களாகவே படைத்துள்ளார். மனிதர்கள் தம்முள் இருக்கும் திறமைகளை உரிய காலகட்டத்தில் விளங்கிக் கொண்டு அந்த பாதையில் தான் பயணிக்கின்ற போது அத்துரையின் சாதனையாளனாக அவன் மிளிர ஆரம்பிக்கிறான்.

இறைவனது ஆசீர்வாதமும் அவனின் விடாப்பிடியான தொடர் முயற்சியும் அவனுக்கு தொடர்ச்சியாக கிடைக்கின்ற போது எவராலும் எட்டிப் பிடிக்க முடியாத உச்சத்தில் தன் இருப்பிடத்தை அமைத்துக் கொள்வதை நம்மால் அவதானிக்க முடிகிறது.

அப்படியாக இறைவனின் ஆசிர்வாதத்தாலும் தன் திறமையாலும் உச்சத்தை தொட்டு இன்று உலகமே அவர் பெயரைச் சொல்லி பேசக்கூடிய ஒருவரை தான் துணிந்தெழு சஞ்சிகை குழு நேர்காணல் செய்கிறது.

இவர் இலங்கையின் பிரபல கவிஞராக, எழுத்தாளராக, ஊடகவியலாளராக, இலங்கையின் முன்னணி தொலைக்காட்சி வசந்தத்தின் நிகழ்ச்சி தயாரிப்பாளராக, பாடல் ஆசிரியராக தனித்துவமான திறமைகளை வெளிக்காட்டியவர். தமிழ் சினிமாவில் தனக்கென ஒரு இடத்தை பிடித்து வெற்றிநடை போடும் இலங்கை கவிஞர் பொத்துவில் அஸ்மின்.



## இலங்கையில் இருந்து கொண்டு இந்திய தமிழர்களின் ரசனையை உள்வாங்கி தங்களால் எப்படி பாடல்களை எழுத முடிகிறது?

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்கின்றான் பாரதி.

ஆம்! இலங்கை எம் தாய்நாடு இந்தியா எம் தந்தை நாடு. இருநாடுகளுக்குள் இருக்கலாம் எல்லைக்கோடு ஆனால் எமக்குள் இல்லை துளியும் வேறுபாடு.நாம் அனைவரும் தமிழ்தாய் பெற்ற பிள்ளைகள். வெவ்வேறு பாத்திரங்களில் இருக்கின்ற ஒரே சுவையுள்ள பானம் நாங்கள். எமக்கு அடித்தால் உங்களுக்கு வலிக்கிறதே அது எப்படி? நாம் அழுதால் நீங்கள் துடிக்கின்றீர்களே அது எப்படி சாத்தியமானது. ஈழத்தமிழர்களுக்காக தன்னுயிர் நீத்த மாவீரர் முத்துக்குமார் தோழர் செங்கொடி எதனால் அப்படி செய்தார்கள்? தொப்புள் கொடி உறவின் மீதான பாசம் என்பது அதுதான். இலங்கையில் இருக்கின்ற படைப்பாளிகளுக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் தமிழகத்தில் இருக்கின்றவர்கள்தான்.

இங்கு இருந்து வெளிவருகின்ற நூல்கள் சஞ்சிகைகளை நாம் வாசிக்கின்றோம். தமிழ் திரைப்படங்களை ரசிக்கின்றோம். தமிழ் பாடல்களை கேட்கின்றோம். உணர்வுபூர்வமாக தமிழகத்தோடு நாம் எப்போதும் ஒன்றித்தே இருக்கின்றோம்.
உங்களுக்கும் இசைஞானி பிடித்திருக்கிறது. "ஆஸ்கார்"நாயகன் பிடித்திருக்கிறது. அதுபோல் எங்களுக்கும் அவர்களை பிடிக்கும். எங்களுக்கும்

"சூப்பர் ஸ்டார்" ரஜினிகாந்தான். எம்.ஜி.ஆர் ரசிகர் மன்றம் இலங்கையிலும் இருக்கிறது.உலக நாயகன் கமல் நடிப்பை நாமும் ரசிக்கிறோம் தலையையும் தளபதியையும் நாமும் தலையில் வைத்துக் கொண்டாடுகிறோம். தமிழன் என்ற திமிர் உங்களுக்கு இருப்பதுபோல் எங்களுக்கும் இருக்கிறது. இப்படி எத்தனையோ விடயங்களில் நாம் ஒரே பாதையில் பயணிக்கின்றோம். இலங்கை தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து தமிழ்பாடல்களையும் கவிதைகளையும் இதுகால வரை இறக்குமதி செய்து வந்தார்கள். நான் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்ய முனைந்திருக்கின்றேன். தமிழை தாய் மொழியாக கொள்ளாத "கொன்ஸ்டைன் ஜோசப் பெசக்கி" என்ற இத்தாலியர் தமிழ் உரை நடையின்

தந்தையாக போற்றப்படுகின்றார் அவர்தான் "தேம்பாவணி" என்ற காப்பியம் தந்த புலவர் வீரமா முனிவர். வெள்ளைக்காரனே தமிழகம் வந்து தமிழுக்கு வெள்ளையடிக்கும்போது
இலங்கை தமிழன் இந்திய தமிழர்களின் உணர்வுகளை எழுதுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

**கவி. கா. மு. ஷெரீப், ரோஷனா பேகம், மு. மேத்தா ஆகியோரை தொடர்ந்து தற்போது நீங்கள்.. தமிழக திரைப்பட உலகில் இஸ்லாமிய பாடலாசிரியர்களின் பங்களிப்பு குறைவாகவே உள்ளதே.**

தமிழ் சினிமாவில் பாடல் எழுதுவதென்பது இலகுவான விடயமல்ல.ஒரு காலத்தில் முகவரி இல்லாமல் அலைந்தவர்கள் தமிழ் சினிமாவுக்கே முகவரிகளாக மாறியிருக்கின்றார்கள். தட்டாமல் கதவு கூட திறக்காது இங்கே போராடாமல் எதுவுமே கிடைக்காது.கிடைத்தாலும் நிலைக்காது. முஸ்லிம் கவிஞர்கள் பாடல் எழுதுவதற்கு முயற்சிக்காது இருந்திருக்கலாம். வந்தாரை வரவேற்று வாழ்வைக்காட்டி வளர்ந்தோங்கி அவர் நிற்க வழியை காட்டும் பண்புள்ள மக்கள் உள்ள நாடு தமிழ்நாடு. இங்கே எவராக இருந்தாலும் திறமையும் முயற்சியும் இருந்தால் தமிழ் சினிமா தூக்கியெறியாது என்றோ ஒருநாள் தோளில் தூக்கி வைத்துக்கொண்டாடும்.

**பிறமொழி வார்த்தையை கலக்காமல் தமிழில் மட்டும் பாடல் எழுதும் கொள்கையை வைத்துள்ளீர்களா?**

உலக மொழிகளின் "ஏவாள்" தமிழ்தான்.நாம் பேசும் தமிழில் பன்னாட்டு மொழிகள் கலந்து இருக்கின்றன. அதுபோல் நம் மொழியும் பல மொழிகளில் மலர்ந்து மணக்கிறது.நான் குமளி பழம் சாப்பிட்டேன் என்றால் இன்று பலருக்கும் புரியாது.ஆப்பிள் பழம் என்றால் அனைவரும் இலகுவில் புரிந்து கொள்வர். சீமெந்து என்றால் பைஞ்சுதை என்று இங்கு எத்தனை பேருக்கு தெரியும்? மேசை என்ற போர்த்துக்கேய சொல்லைத்தான் நாம் தத்தெடுத்து தமிழாக நினைத்து பயன்படுத்துகின்றோம். தமிழ்நாட்டு பத்திரிகை, தொலைக்காட்சி ஊடகங்களில் ஆங்கில வார்த்தைகள் தமிழுக்கு நிகராக பயன்படுத்துவதை நான் பார்த்திருக்கிறேன். இங்கு பலருக்கு ஆங்கிலம் தெரிந்தளவுக்கு தமிழ் தெரியாது என்பது உறைக்கும் உண்மை. இத்தகைய சூழலில் தூய தமிழில் மட்டும்தான் பாடல் எழுதுவேன் என்று கூறுவது ஏமாற்று வேலை.





உடை தைக்கும் தையல்காரரிடம் யாராவது தனக்கு பிடிக்காத நிறத்தில் துணியை கொடுத்தாலும் தைத்துக் கொடுத்தே ஆகவேண்டும். எனக்கு இந்த நிறம் பிடிக்கவில்லை என்னால் இதனை தைக்க முடியாது என்று சொன்னால் வந்தவர் வேறு தையல்காரரை நாடுவார். அந்த தையல்காரர் நிலைதான் பாடலாசிரியனுக்கும். இங்கு எங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடமில்லை. கதைச் சூழலுக்கு என்ன தேவையோ இயக்குனர் இசையமைப்பாளர் எதை விரும்புகிறாரோ அதைதான் நாங்கள் செய்ய வேண்டும். தமிழ் சினிமாவில் நான் இப்படிதான் பாடல் எழுதுவேன் என்று முரண்டு பிடிக்க முடியாது எப்படி நான் எழுத வேண்டும் என்று கேட்க வேண்டும். நான் ஆங்கில வார்த்தை கலந்து எழுத மாட்டேன் தூய தமிழில்தான் எழுதுவேன் என்று சொல்லிக்கொண்டிருந்தால் அந்த வாய்ப்புக்காக பலர் வரிசையில் காத்திருக்கின்றார்கள்.







தூய தமிழில் பாடல் வரவேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம் நமது அன்றாட வாழ்வில் தமிழுக்கு கொடுக்கும் இடந்தான் என்ன? ஆங்கிலத்தில் பேசுவதை கௌரவமாய் நினைக்கும் நாம் குறைந்த பட்சம் தமிழர்களுடனாவது தமிழில் பேசுகின்றோமா? "குட்நைட்"டில் தூங்கச் செல்லும் எங்கள் இரவு "குட்மோர்னிங்கில்"தானே மீண்டும் எழும்புகிறது..

**இலங்கையில் இருக்கும் நீங்கள் பாடல் வாய்ப்புகளை எப்படி பெறுகின்றீர்கள். சிட்சுவேசன் மெட்டுக்களை எப்படி தெரிந்து கொள்கிறீர்கள்.**

இசையமைப்பாளர் நடிகர் விஜய் ஆண்டனி அவர்களின் "நான்" திரைப்படத்தில் இடம்பெற்ற "தப்பெல்லாம் தப்பேயில்லை" என்ற பாடலினூடாகத்தான் நான் தமிழ் சினிமாவில் நான் அறிமுகமானேன். அதன் பின்னர் சுமார் 15 திரைப்படங்களில் நான் பணிபுரிந்துள்ளேன்.அமரகாவியம், சும்மாவே ஆடுவோம், எந்த நேரத்திலும் ஆகிய படங்கள் இதுவரை வெளியாகியுள்ளன.இயக்குனர் ஜீவாசங்கரின் அமரகாவியம் படத்தில் ஜிப்ரானின் இசையில் பத்மலதா பாடிய "தாகம் தீர கானல் நீரை காதல் இன்று காட்டுதே" பாடலுக்கு சிறந்த வெளிநாட்டு பாடலாசிரியருக்கான "எடிசன்" விருது எனக்கு கிடைத்தது. எந்த நேரத்திலும் படத்தின இயக்குனரையோ, இசையமைப்பாளரையோ நேரடியாக சந்திக்காமலே இப் படத்தின் பாடல்கள் என்னால் எழுதப்பட்டன. கடல் கடந்து இருந்தாலும் தேவையேற்பட்டால் அவ்வப்போது சென்னைக்கு வந்து போகின்றேன். 2021 ஆண்டில் நான் பணிபுரிந்த பல படங்கள் வெளிவர இருக்கின்றன. புதிய படங்களுக்கும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளேன். தூரத்தில் இருப்பதால் பல நல்ல வாய்ப்புகளும் கடைசி நேரத்தில் கைநழுவிப் போயிருக்கின்றன. தேடி வரும் வாய்ப்புகளை பயன்படுத்துகின்றேன். வாட்சப் தொழில் நுட்பம் என் பாடல் பணியை இலகுவாக்கிறது.

வாட்சப்பில் டியுன் கேட்டு
வாட்சப்பில் கதை கேட்டு
வாட்சப்பில் பாட்டெழுதி
வாட்சப்பில் அதை திருத்தும்
வாண்மை மிகு பாவலன் நான்
வாழ்க்கையிலே கண்டவற்றை
வார்த்தைகளில் கொண்டு வந்து
வானளந்த தேன் கவியால்
வரலாற்றில் பெயர் பதிப்பேன்.
வருங்காலம் என் காலம்
வலியாவும் ஒளியாகும்





வழியற்று அலைவோர்க்கும்
வழியென்றன் வழியாகும்.

**ஜெயலலிதா மறைவுக்கு வானே இடிந்ததம்மா என்ற பாடல் எழுதி வைரலான நீங்கள் தற்போது பாடும் நிலாவுக்கு 'எழுந்து வா இசையே' என்ற இரங்கற்பாடல் எழுதினீர்கள் அது பற்றி கூறுங்கள்.**

இலங்கை முஸ்லிம்களின் தலைவர் அஷ்ரப் அவர்களின் மறைவின் போது நான் எழுதிய இரங்கல் கவிதைக்கு ஒரு போட்டியில் அகில இலங்கை மட்டத்தில் முதலாமிடம் கிடைத்தமையினால் 2001ஆம் ஆண்டு அப்போதைய இலங்கை ஜனாதிபதி சந்திரிகாவின் கைகளால் விருதுபெற்றேன். அதுதான் நான் தேசிய மட்டத்தில் பெற்ற முதல் விருது. அதன் பின்னர் இலங்கையில் மட்டுமல்லாது உலகளவில் நடக்கும் முக்கிய நிகழ்வுகள், சம்பவங்கள் எனை பாதித்தால் அதனை கவிதையாக எழுதிவிடுவேன்.

2004 ஆண்டு சுனாமியின் போது நான் எழுதிய "உலக கோப்பை வென்ற சுனாமி" கவிதை இலங்கை ஊடகங்களில் வெளிவந்து அதிர்வை ஏற்படுத்தியது. சென்னை வெள்ளத்தின்போது "கொல்லெனை கொல்லும் மழை" என்ற கவிதை எழுதினேன். அந்த வகையில் "அம்மாவுக்கு" முகநூலில் நான் எழுதிய கவிதைதான் ரசிகர்களின் வரவேற்பை தொடர்ந்து பாடலாக மாறியது. அதே போல் பாடுநிலவுக்கு அவுஸ்திரேலியாவில் வாழும் ஈழத்து இசையமைப்பாளர் அருண்குமாரசுவாமி இசையில் எழுந்து வா இசையே என்ற பாடல் எழுதினேன்.அந்த பாடலை இலங்கையில் புகழ்பெற்ற பாடகர்கள் இணைந்து பாடியுள்ளனர்.அந்த பாடலுக்கும் மிகுந்த வரவேற்பு கிடைத்தது. நடிகர், இயக்குநர் டி.ராஜேந்தர் அவர்கள் எனக்கு தொலைபேசியில் அழைத்து வாழ்த்தினார்.தமிழ்சினிமா ஏற்பாடு செய்த எஸ்பிபியின் முதலாவது நினைவுதினக்கூட்டத்தில் எமது பாடல் பற்றி சிலாகித்து பேசினார்.இந்த பாடலின் ஊடாக பல புதிய வாய்ப்புகளும் வந்துள்ளன.

**இலங்கையில் ஈழ இலக்கியம் தேசிய இலக்கியம் என்று இரண்டாக பிரிந்து கிடக்கிறது தாங்கள் எதை சேர்ந்தவர்.?**

இரண்டல்ல இன்னும் பல பிரிவுகள் இருக்கின்றன. நான் சுதந்திரமானவன் காற்றைப்போன்றவன் எந்த வட்டத்துக்குள்ளும் என்னை சுருக்கிக்கொள்ள நான் விரும்புவதில்லை ஆனால் இலங்கையில் உள்ள அத்தனை பிரிவுகளோடும் ஒரு படைப்பாளியாய் நட்பு பாராட்டுகின்றேன்.

அடிப்படையில் நான் ஒரு மரபுக் கவிஞன். புதுக்கவிதைகளும் எழுதியுள்ளேன்.நவீன கவிதைகளையும் வாசிப்பேன் ஆனால் தனித்துவமாகத்தான் யோசிப்பேன். இதுவரை "விடை தேடும் வினாக்கள்", "விடியலின் ராகங்கள்", "பாம்புகள் குளிக்கும் நதி" என மூன்று கவிதை நூல்கள் வெளிவந்துள்ளன. 2022இல் "தட்டாதே திறந்து கிடக்கிறது" கவிதை நூல். "பாடல் பட்ட பாடு" பத்தி எழுத்து நூல் வெளிவர இருக்கின்றன. இன்றைய இளைய தலைமுறையினர் மரபுக் கவிதை எழுதுவது அரிதாக இருக்கிறது .நான் யாப்பியல் கவிதைகளில் வாழ்வியல் வார்த்தைகளை கலந்து எழுதுகின்றேன். எனது யாப்பிலக்கண அறிவு மெட்டுக்கு பாடல் எழுதுவதற்கு உதவுகின்றது. போர்க்காலத்தில் ஈழம் சார்ந்த கவிதைகளை ஈழநிலா என்ற பெயரில் எழுதியுள்ளேன். பிரிவுகளில் சிக்கிக்கொண்டு படைப்பாளிகளுள் நான் பெரியவன் நீ சிறியவன் என்று காகிதப் போர் செய்துகொண்டு இலக்கியவாதிகளின்

இலக்கியவாதி என்று தம்பட்டமடித்துக்கொண்டு இருப்பதில் எனக்கு உடன்பாடில்லை.. மக்களுக்கு புரிகின்ற படைப்புகளை தருகின்ற எம்மண்ணையும் மக்களையும் பாடுகின்ற மக்கள் கவிஞனாய் இருப்பதனையே உயர்வாக கருதுகிறேன்.

**உங்கள் வட்டாரத்தை சேர்ந்த பாலு மகேந்திரா பற்றி எப்போது அறிந்தீர்கள். அவருடைய திரையுலக செயற்பாடு பற்றி தங்கள் கருத்து?**

மகாகவி பாரதியின் மேன்மையை முதன் முதலாக வெளியுலகுக்கு வெளிக்கொணர்ந்த சுவாமி விபுலானந்தர் பிறந்த மண் மட்டக்களப்பு. அந்த மண்தான் பாலுமகேந்திரா என்ற கமெரா கவிஞனையும் ஈன்றெடுத்தது. தமிழ் சினிமாவுக்கு தேசிய அங்கீகாரம் பெற்றுக் கொடுத்த தமிழன் எம்மண்ணவர் என்பதில் எமக்கும் பெருமை. அவர் தன் வாழ்வினை சினிமாவுக்கு அர்ப்பணித்தவர். நாம் இன்று வியந்து பார்க்கும் பல விருட்ஷங்கள் அவர் போட்ட விதைகள்தான். தமிழ் சினிமாவுக்கு ஒளிபாய்ச்சியவர்கள் வரிசையில் எங்கள் ஒளி ஓவியருக்கும் நிரந்தர இடமுண்டு.

**கவிஞர் திரைப்பட பாடலாசிரியர் தவிர்த்து வேறு என்ன மாதிரியான கலை வடிவங்களில் விருப்பம்.**

ஆரம்பத்தில் பத்திரிகை துறையில் பணியாற்றிய நான் அதன் பின்னர் தொலைக்காட்சி துறையில் இணைந்து பத்தாண்டுகாலமாக பணிபுரிந்து வருகின்றேன். இலங்கை வசந்தம் தொலைக்காட்சியில் நான் இயக்கிய "தூவானம்" என்ற கலை, இலக்கிய சஞ்சிகை நிகழ்ச்சி மூன்று முறை இலங்கை அரசினால் சிறந்த தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சிக்கான தேசிய விருதினை பெற்றுள்ளது. சிறுகதைகளும் எழுதியுள்ளேன். நான் பிறந்த மண்ணின் வாழ்வியலை நாவலாய் எழுதவேண்டும் என்ற எண்ணமும் உள்ளது. நபி முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை பற்றி காவியம் ஒன்று எழுத வேண்டும் என்ற கனவும் உள்ளது. வானொலிகளுக்கு நிலைய குறியீட்டு இசை மற்றும் விளம்பரங்களும் எழுதியுள்ளேன். வாய்ப்பு கிடைத்தால் தமிழ் சினிமாவுக்கு என்னால் வசனம் எழுத முடியும் என்ற நம்பிக்கையுண்டு.தமிழில் எந்த கலைப்படைப்பையும் என்னால் படைக்க முடியும். ஒரு போதும் முடியாது என்று நான் கருதியதில்லை காரணம் என்னிடம் "தமிழ்" இருக்கிறது.



















**தமிழ் உலகில் உங்களுக்க பிடித்த கவிஞர் யார்? இலக்கியவாதிகள் யார்?**

பிடித்த கவிஞர் இருந்தால் பிடிக்காத கவிஞர்களும் இருக்கலாம் அல்லவா .எனக்கு அப்படி இல்லை. நான் நல்ல கவிதைகளை தருகின்ற என் சம காலத்து கவிஞனுக்கும் ரசிகன்தான். தமிழ் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் பல நல்ல கவிஞர்கள் இருக்கின்றார்கள். அவர்களை படிக்கின்றேன் பட்டியலிட விருப்பமில்லை. கவிப்பேரரசு வைரமுத்து, வித்தக கவிஞர் பா. விஜய் ஆகியோர் எனது கவிதை நூலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.கவிக்கோ அப்துல் ரஹ்மான் தலைமையில் மலேசியாவில் நடைபெற்ற பன்னாட்டு கவியரங்கில் நான் பாடிய மரபுக்கவிதை எனது மரபு அறிவுக்கு சிறந்த எடுத்த காட்டு என்று வைரமுத்து எனது நூலில் குறிப்பிட்டுள்ளார். கவிக்கோவும் அருகே அழைத்து தோள் தொட்டு என்னை அந்த கவியரங்கு நிகழ்வின்போது வாழ்த்தினார் அது என்வாழ்வில் மறக்க முடியாது. கவிஞர் மு .மேத்தா அவர்களின் நேரடி வாழ்த்தினையும் பெற்றுள்ளேன். இவர்களை வாசித்து கடந்து வராத கவிஞர்கள் தமிழில் இல்லை என்றே கூறலாம்.

**தமிழகத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒவ்வொரு விதமான தமிழ் பேசப்படுகிறது. அதை உள் வாங்கி உங்களால் திரைப்பட பாடல் படைக்க முடியுமா?**

தமிழ் சினிமாவில் பாடல் எழுதுகின்ற பாடலாசிரியர்கள் எவராயினும் ஒரு குறிப்பிட்ட வட்டார மொழியை சேர்ந்தவர்களாவே இருப்பர். அவர்களால் தமிழகத்தில் உள்ள

அத்தனை வட்டார மொழிகளிலும் பாடல் எழுத முடியுமாயின் என்னாலும் முடியும் என்றே கூறுவேன். பாடலாசிரியர்கள் பாடலின் தேவை கருதி பல ஆய்வுகள் செய்துதான் பாடல் எழுதுவர். தமிழகத்தின் வட்டார மொழிகளில் அமைந்த நாவல்களை நான் வாசித்துள்ளேன்.திரைப்படங்களை ரசித்துள்ளேன். அவை எனக்கு துணை நிற்கின்றன. வட்டாரமொழி பேசுகின்ற மக்களின் பேச்சுக்கள், படைப்புகள் இணைய வெளியெங்கும் சிதறிக்கிடக்கின்றன. அதனால் வட்டார மொழியில் பாடல் எழுதுவதில் சிரமம் இல்லை என்று நினைக்கின்றேன்.

**உங்கள் முன்னோர்கள் பிறப்பிடம் ராமநாதபுரம் மாவட்டம். உங்களை போன்று இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கையில் வாழ்கின்றவர்களை அங்குள்ளவர்கள் எப்படி நோக்குகின்றார்கள்.**

உலகத்தின் வரலாறே புலம்பெயர்வில்தான் உருமாறியிருக்கிறது. இன்று இங்கு இருப்பவர்கள் நாளை எங்கோ இருக்கலாம். எவருக்கும் எதுவும் நிரந்தமில்லை. அவுஸ்ரேலியாவின் பூர்விக பழங்குடிகள் தமிழர்கள் இன்று யார் அதற்கு சொந்தம் கொண்டாடுகின்றனர்? இலங்கையின் பழங்குடிகளான இயக்கர், நாகர் தமிழ் சிங்களம் பேசியதாக எந்த சான்றுகளும் இல்லை. இங்கு இருக்கின்ற எல்லோருமே இந்தியாவின் பலமாநிலங்களில் இருந்து

ஒவ்வொரு காலகட்டத்திலும் வந்து சேர்ந்தவர்கள்தான். மற்றவர்கள் எங்களை எப்படிப் பார்க்கின்றார்கள் என்பதைவிட நாங்கள் எங்களை எப்படி பார்க்கின்றோம் என்பதே இங்கு முக்கியமானது. நாம் எம்மை இலங்கையர்களாகவே பார்க்கின்றோம்.

### உங்கள் பாடலுக்கு இலங்கை தமிழ் மக்கள் மத்தியில் வரவேற்பு எப்படி உள்ளது?

தமிழகத்தை சேர்ந்த ஒருவர் தமிழ் சினிமாவில் பாடல் எழுதிவிட்டால் அது சாதாரண சம்பவம்தான். ஆனால் இலங்கையர் எந்த வடிவத்திலும் தமிழ் சினிமாவுக்கு பங்களிப்பு செய்தாலோ அது பெரும் சாதனையாக பார்க்கப்படுகிறது. இருபது ஆண்டுகள் இலக்கிய உலகில் வராத புகழை தமிழ் சினிமாவில் பாடல் எழுத ஆரம்பித்து ஆறு ஆண்டுகளுக்குள் நான் அடைந்துள்ளேன். தமிழ் சினமாவில் பாடல் எழுதிய பிறகுதான் என் கவிதைகளுக்கும் சரியான கௌரவம் கிடைத்துள்ளது. ரசிகர்களும் அதிகரித்துள்ளனர். என்று சொல்லலாம்.

### எதிர்காலத்தில் பொத்துவில் அஸ்மின் எப்படி அறியப்பட வேண்டும்.

தமிழ் சினிமாவின் சிறந்த பாடலாசிரியர்கள் வரிசையில் எனது பெயரும் பதியப்பட வேண்டும் என்றே நான் விரும்புகின்றேன். அதற்கான முயற்சியின் ஆரம்ப நிலையில் இருக்கின்றேன். என்றோ ஒருநாள் இந்த உலகே என் பாடல்களை, கவிதைகளை கொண்டாடும் என்று உறுதியாக நம்புகின்றேன்.

எந்தன் வானம் எந்தன் பூமி எந்தன் வாழ்க்கை கறுக்கட்டும் எல்லாம் சேர்ந்து என்றோ ஒரு நாள் ஏவுகணையினை கருக்கட்டும் அதுவரைக்கும் எந்தன் பெயர் வெறும் பொத்துவில் அஸ்மினாய் இருக்கட்டும்.

### ஐம்பது ஆண்டுகளுக்கு பின்னர் இலங்கையிலிருந்து தமிழ் திரைப்பட பாடலாசிரியர்... ஏன் இவ்வளவு பெரிய இடைவெளி?

ஜெமினி கணேசன் நடித்த "எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்". என்ற திரைப்படத்தில் பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் உதவியாளராய் பணி புரிந்த எமது மட்டக்களப்பு பிரதேசத்தை சேர்ந்த கவிஞர் ஈழத்து ரத்தினம் பாடல் எழுதியுள்ளார். அதுவே இலங்கையர்



தமிழ் சினிமாவில் எழுதிய முதல் பாடலாகும். அதன் பின்னர் தொடர்ந்து நான் எழுதி வருகின்றேன்.எனக்கு கிடைத்த இந்த வாய்ப்பும் இலகுவாக கிடைத்ததல்ல. "நான்" திரைப்படத்தில் ஒரு பாடலாசிரியரை அறிமுகப்படுத்தும் நோக்கோடு விஜய் ஆண்டனி சர்வதேச ரீதியாக பாடலியற்றல் போட்டியொன்றை வைத்திருந்தார் அப்போட்டியில் இருபதாயிரம் போட்டியாளர்களுள் முதலிடம் பெற்று வெற்றியீட்டியதால்தான் எனக்கு தமிழ் சினிமாவில் பாடல் எழுதும் வாய்ப்பு கிடைத்தது. 2010 ஆம் ஆண்டு இலங்கையில் நான் உருவாக்கிய பாடலொன்றை முகநூலில் பாராட்டிய இயக்குனர் ஏ.வெங்கடேஷ்தான் என்னை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்துவதாக முதலில் அறிவித்திருந்தார். ஆனால் அதற்கு முன்னர் விஜய் ஆண்டனி என்னை அறிமுகப்படுத்திவிட்டார்.

### முதல் பாடல் வாய்ப்பு வழங்கிய விஜய் ஆண்டனி பற்றி?

நான் வாழ்வில் மறக்க முடியாத என்றும் மறக்கக்கூடாத மனிதர் விஜய் ஆண்டனி. கவிஞர் வைரமுத்து அவர்களுக்கு "இதுவொரு பொன்மாலை "பொழுது பாடல் எப்படி நல்ல ஆரம்பமாக அமைந்ததோ அதுபோல் "தப்பெல்லாம் தப்பேயில்லை" பாடல் உங்களை உயரத்தில் இருத்தும் என்று அன்றே கட்டியம் கூறியிருந்தார் தமிழில் முதல் நாவலை எழுதிய மாயுரம் வேதநாயகம் பிள்ளையின் பேரன் அவர். தமிழாற்றல் மிக்கவர். மிகச்சிறந்த உழைப்பாளி.எவ்வளவு உயரத்துக்கு சென்றாலும் கடந்த வந்த பாதையை மறக்காமல் தன்னடக்கத்தோடு பழகுபவர். தன்னம்பிக்கை மிகைத்தவர்.

நான் தமிழ் சினிமாவில் பெற்ற முதல் விருதினை அவருக்குத்தான் சமர்ப்பணம் செய்தேன். குறுகிய காலகட்டத்துக்குள் பலரை தமிழ் சினிமாவில் அறிமுகப்படுத்திய பெருமை அவருக்கு உண்டு.என் இதய இருக்கையில் அமர்ந்து இருக்கும் உன்னதமான மனிதர்களில் அவருக்கு என்றும் நிரந்தர இடமுண்டு.

### தமிழக திரைப்படப் பாடலாசிரியர்களில் தங்களை கவர்ந்தவர்கள்?

நாவில் நடனமிடும் நற்கவிஞர் வைரமுத்து பாவில் நிதம் குளித்து பாட்டெழுத கற்றவன் நான் பாட்டரசர் வாலியையும் குருவாக நெஞ்சிருத்தி ஊட்ட வந்தேன் தமிழால் தேன்.

### திரைப்பட பாடல்கள் எழுதுவதுதற்கும், கவிதைகள் எழுதுவதற்குமான வேறுபாட்டினை எப்படி அடையாளம் காண்கிறீர்கள்?

ஐம்பெருங்காப்பியங்கள் அணிந்த தமிழன்னையின் கால்களுக்கு கால்கொலுசாய் அழகு சேர்ப்பது கவிதைகள் என்றால் அவள் அண்டம் அதிர ஆடும்போது அணிந்து நிற்கும் காற்சலங்கைதான் பாடல் என்பேன். பாடலாசிரியர்கள் எல்லோரும் கவிஞர்களல்லர் கவிஞர்களில் பாடலாசிரியர்களும் இருக்கின்றனர்.

நல்ல கவிதைகள் பாடலாக பரிணமித்ததுண்டு. உன்னதமான பொருள் நிறைந்த பாடலென்றாலும் கவிதைகளின் உயர்வான இடத்தை ஒருநாளும் அந்தப் பாடலால் அடைய முடியாது. மரபுக் கவிதைகள் சிறகு முளைத்த சிட்டுக்குருவிகள் அதனால் பாடல் என்னும் வானத்தில் இலகுவாக பறக்க முடியும். புதுக்கவிதைகள், நவீன, பின்நவீன கவிதைகள் அப்படியல்ல பாடல் வானத்தில் பட்டம் போன்று அதனை பறக்க வைத்து பார்க்க வேண்டுமாயின் செயற்கை சிறகுகள் செய்தே ஆகவேண்டும்.

பாடல் எழுதும் கவிஞன் வீடுகட்டும் கொத்தனுக்கு ஒப்பானவன். யாரோ ஒருவரின் தேவைக்கு யாரோ ஒருவரின் வடிவமைப்புக்கு ஏற்ப யாரோ ஒருவரின் கட்டளைக்கு பணிந்து வீட்டினை அழகுற அவன் கட்டி கொடுத்தல் வேண்டும்.அந்த வீட்டின் ஒரு செங்கல்லைக்கூட அவன் விருப்பத்துக்கு வைத்து கட்ட முடியாது. ஆனால் அதே கொத்தனார் தனது வீட்டினை தனக்குப்பிடித்தமான வடிவமைப்பில் அவன் நினைத்த நேரத்தில் பிறர் வீடுகளை விட நேர்த்தியாக தனித்துவமாக கட்ட முடியும்.



அது போலவே இயக்குனரின் கதையினை இசையமைப்பாளர் வழங்கும் இசைக்கு ஏற்ப பாடலாக எழுத பணிக்கப்படும்போது "தப்பெல்லாம் தப்புத்தான்" என்று தெரிந்திருந்தும் "தப்பெல்லாம் தப்பேயில்லை" என்று எழுத வேண்டுமாயின் எழுதித்தான் ஆகவேண்டும். ஆனால் கவிஞன் கவிதை எழுதும் போது சுதந்திரமாக செயற்பட்டு தனக்கு பிடித்த கருத்தினை தனக்கு பிடித்த வடிவத்தில் படைப்பாக தரமுடியும்.

அடிப்படையில் நான் மரபுக் கவிஞன். இலக்கணம் பிசகாமல் கவிதை இயற்றும் நுட்பம் தெரிந்ததால் தத்தகாரத்துக்கு பாடல் வரிகளை எழுதுவது எனக்கு கடினமாக இருப்பதில்லை.

நான் எழுதும் வரிகளை இசையமைப்பதற்கு இசையமைப்பாளருக்கும் சிரமமாய் இருந்ததில்லை. கவிதைகள் கருவாகி உருவாகி திருவாகி இயற்கையாக பிறக்கின்றன. பாடல்களோ செயற்கையாக செய்யப்படுகின்றன.

### இசைக்கும், கவிதைக்குமான காதல் எப்படிப்பட்டது?

இசைக்கும் கவிதைக்கும் இடையிலான காதல் இன்று நேற்று முளைத்ததல்ல ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே முகிழ்த்தது. வள்ளுவன் திருக்குறளை வரைந்தபோது, கம்பன் இராமாயணத்தை பாடிய போது, ஔவை தன் அழகிய பாடல்களால் வாழ்க்கை தத்துவத்தை வழங்கியபோது , அருணகிரிநாதர் திருப்புகழால் எம்மை திண்டாட வைத்தபோது, பாரதி தன் கவிதைகளால் தீண்டாமைக்கு

தீவைத்தபோது கவிதையும் இசையும் கணவன் மனைவியுகமாகவே இருந்தனர்.

என்று மேலைத்தேய இலக்கியம் தமிழில் இறக்குமதி செய்யப்பட்டதோ அன்றுமுதல் இசையை கவிதை மெல்மெல்ல கைவிடத்தொடங்கி இன்று முற்று முழுதாக விவாகரத்து செய்துவிட்டது. அந்த சோகத்தில் பாவம் தகப்பன் தமிழ் தாடிவைத்துக்கொண்டு அலைகிறது. இருந்தும் இசைக்கும் கவிதைக்குமான காதல் திருமணம் ஆங்காங்கே நடக்கவே செய்கின்றன. ஆனால் இவ்வாறான திருமணங்களை ஏதோ ஓரின சேர்க்கையாளர்களின் திருமணம்போல விசமத்தோடு பார்க்கின்றன இன்றைய இலக்கிய உலகம்.

**இலங்கை சூழலின் மொழியானது தமிழக சினிமாவின் பாடல் மொழிக்கு எவ்வகையில் பொருந்திப் போகிறது?**

கவிஞன் பிறக்கிறான் எழுத்தாளனைப்போல பாடலாசிரியன் உருவாக்கப்படுகின்றான். பாடல் எழுதுவதற்கு பயிற்சி வேண்டும். அதுவும் தமிழக சினிமாவில் எழுதுவதற்கு முயற்சி வேண்டும்.பயிற்சியும் முயற்சியும் இணையும்போது என்றோ ஒருநாள் உயர்ச்சி தோன்றும்.

ஒரு பாடலாசிரியன் பலதையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும். புத்தகங்களை வாசிக்க வேண்டும், புதுமையாக யோசிக்க வேண்டும். ஒரு பொருளின் எடை பூமியில் இருப்பதைவிட ஆறில் ஒரு பங்கு நிலவில் குறைவடையும் என்பது முதல் டொலரின் பெருமதி அதிகரிக்க பெற்றோலின் விலை மட்டுமல்ல பொருட்களின் விலையும் அதிகரிக்கும் என்பது வரை தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

கொடுத்த சந்தத்துக்கு வார்த்தைகளை இட்டு நிரப்பாமல் வாழ்க்கையை நிரப்புவனே சிறந்த பாடலாசிரியன். வாழ்நாளில் ஒரு புத்தகத்தையே வாசித்திராத ஒருவரால் எப்படி புத்தகம் எழுத முடியாதோ அதுபோல வாழ்நாளில் பாடல்களை ரசித்திராத ஒருவரால் ஒரு பாடலையும் எழுத முடியாது.

சினிமாவில் கதை நிகழும் களத்துக்கேற்ப எவ்வாறு பாத்திரங்களின் உரையாடல் வடிவமைக்கப்படுகிறதோ அவ்வாறே பாடல்களும் எழுதப்படுகின்றன. இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கும் ஒரே தமிழ்தான் இருக்கிறது. மனிதர்கள்தான் பேசும்போது தமது வசதிக்கேற்ப தமிழை மொழிகின்றனர். இந்த உண்மைய ஆய்ந்துணர்ந்தால் இலங்கை கவிஞனாலும் தமிழ் சினிமாவில் வெற்றிகரமான பாடலை தரலாம் என்பது திண்ணம்.

**நீங்கள் கவிதைத்துறையில், குறிப்பாக மரபுக்கவிதைத்துறையில் ஈடுபாடு கொண்டமைக்கு பின்னணியாக இருந்த காரணி பற்றிக் கூற முடியுமா?**

தென்றலே கவிபாடும் தென்கிழக்குமண் கவிஞர்களின் கலைஞர்களின் கருவறையாக இருக்கின்றது.அதிலும் தேனொழுகும் நாட்டார் பாடல்களின் விளைநிலங்களில் ஒன்றாக விளங்குகின்ற பொத்துவில் மண்ணின் வித்தாக இருக்கும் நான் கவிஞனாக விளங்குவதில் வியப்பேதுமில்லை நகரத்தின் புகையை குடித்து வாழ்பர்களைவிட கிராமத்தின் புழுதியை குடித்து வளர்பவர்களுக்கு நன்றாக கவிதை வரும்.என் கிராமமே ஒரு அழகிய கவிதை அதை வாசிக்க வாசிக்க நானும் கவிஞனாக மாறிவிட்டேன் ஒரு கவிஞனை கற்பித்து வளர்க்க முடியாது.ஒருவன் கவிஞனாக மிளிர்வதற்கு கருவிலே திருவாக வேண்டும். தான் வாழும் காலத்தின் கோலத்தை வார்த்தைக் கோடுகளால் வரைந்துவிடும் கவிஞனின் நாளத்திலே,நெஞ்சின் ஆழத்திலே, கற்பனைத்தீ உற்பத்தியாகி அது கவித்துவத்தோடு கனன்று எரிவதற்கு முதலில் அவன் பிறப்பின் மூலத்திலே கவிதை இருக்கவேண்டும்.எனக்குள் பந்தலிடும் பாட்டுப்பூக்களுக்குள் இருந்து என் பாட்டன் முப்பாட்டன் முன்னோர்கள் அனைவரும் முறுவலிக்கின்றார்கள்.

மேலும்சிறிய வயதில் இருந்தே எனக்குள் இருந்த இடையறாத வாசிப்பும் என்னை வளப்படுத்தியிருக்கின்றது. இற்றை வரை என்னை பலப்படுத்தி வருகின்றது. அத்தோடு பாடசாலைக்காலத்தில் என் கவிதைகளுக்கு கிடைத்த சின்னச் சின்ன பாராட்டுதல்கள், பெரிய பெரிய விமர்சனங்கள் தேசிய மட்ட கவிதைப்போட்டிகளில் கிடைத்த அங்கீகாரங்கள் என்படைப்பு நிலத்தில் நம்பிக்கை விதைகளை நட்டுவைத்தன பாலர் வகுப்பில் படிக்கும் போது ஆசிரியர் பாடப்புத்தகத்தில் உள்ள பாடல்களை இசையோடு பாடிக்காட்டுவார் அதிலே எனக்கு ஒரு ஈர்ப்பு ஏற்பட்டது. பின்னர் ஐந்தாம் ஆறாம் தரங்களில் படிக்கின்றபோது புத்தகத்தில் உள்ள பாடல்களை ஓசை நயத்தோடு நானும் பாட ஆரம்பித்துவிடடேன். அது இற்றைவரை தொடர்கின்றது. இப்பொழுதும் பாரதி, பாரதிதாசன், காசியானந்தன், நீலாவணன், சுபத்திரன், கவிதைகளை ரசித்து ஓசையோடு பாடும் பழக்கம் இருக்கின்றது. அதுவும் எனக்குள் என்னையறியாமல் மரபறிவை விதைத்து சென்றிருக்கலாம். பிற்காலத்தில்

மறைந்த கவிஞர் ஈழக்குயில் இத்ரீஸ் மற்றும் காவியப் புலவர் கலாநிதி ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்களிடமும் யாப்பிலக்கணத்தை கற்றுக்கொண்டேன்.



### இன்றைய பத்திரிகை சஞ்சிகை சமூக வலைத்தளங்களில் தரங்குறைந்த கவிதைகளைக் காணும்போது உங்கள் மனநிலை எப்படியிருக்கும்?

இன்று கணிதத்தை விட கவிதையை விளங்குவது கடினமாய் இருக்கின்றது.புதுக்கவிதை என்ற பெயரில் சிலர் புலம்பல்களை அவிழ்க்கின்றார்கள்.கேட்டால் உலகத்தரம் வாய்ந்த படைப்பு அப்படித்தான் இருக்குமென்று பீற்றுகின்றார்கள்.வாய்க்கு வரும் வார்த்தைகளை ஒன்றன்பின ஒன்றாக ஒடித்துப்போட்டால் அதை கவிதை என்று இளையதலைமுறையினரில் ஒரு சிலர் நம்பிக்கொண்டிருக்கின்றார்கள். தெருவுக்கு தெரு முளைத்திருக்கும் இத்தகைய காளான்களால் நல்ல கவிஞர்களின் பெயரும் நாறிக் கிடக்கின்றது.எனக்கு ஒன்றோடு ஒன்பதாகிப்போவதில் உடன்பாடில்லை. அதனால்தான் புதுமையென்னும் கவசத்தை அணிந்துகொண்டு மரபென்னும் போர்வாளை கையிலெடுத்தேன். நான் மரபோடு கைகுலுக்கிக்கொள்வதால்தான் இன்று இருக்கின்ற இளையதலைமுறைக் கவிஞர்களில் இருந்து என்னால் வேறுபட்டு நிற்கமுடிகின்றது.



மரபு என்பது அடித்தளம். இலக்கியத்தின் எத்தளத்திற்கு செல்வதாயினும் இத்தளத்தில் இருந்தே ஆரம்பிக்கவேண்டும். அகரம் அறியாதவன் உகரத்தை உச்சரிக்கவே கூடாது. எட்டயபுரத்து கவிஞன் தொடக்கம் எங்கள் தேசத்தின் மூத்தகவிஞர்கள் வரை மரபு தெரியாமல் புதுமைக்குள் புகுந்தவர்கள் அல்லர். அவர்கள் தம்முன்னோர்களைக் கற்று முத்துக்குளித்தவர்கள். அதனால்தான் அவர்களால் முத்தமிழிலும் பிரவாகிக்க முடிந்தது. இற்றைவரை முழுநிலவாக பிரகாசிக்க முடிந்தது. எனவே, இளைய தலைமுறைப்படைப்பாளிகள் மரபு இலக்கியங்களை கசடற கற்றுக்கொள்ள வேண்டும். மூத்த படைப்பாளிகளின் அறிவுரைகளை பெற்றுக்கொள்ளவேண்டும்.



அப்பொழுதுதான் வயதில் இளையவராக இருந்தாலும் எழுத்தில் முதியவராக எம்மால் மிளிர முடியும். காகிதச்சோலைகளில் மலரும் கவிதைப்பூக்களுக்கு காலம் கல்மாரி பொழிவதும் கல்வெட்டு செய்வதும் அவரவர் கவித்துவ ஆளுமையிலே அடங்கி இருக்கின்றது.மரபெனும் மகுடத்தை, பழந்தமிழ் கவிதைகளை, பழஞ்சோற்றைப்போல் பார்ப்பவர்களின் படைப்புக்களுக்கு எதிர்காலம் நல்ல சவப்பெட்டிகளை செய்துவைத்து காத்திருக்கின்றது.

காலாண்டு சஞ்சிகை 3



# ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் அவரி
# 3 காலாண்டு மின் சஞ்சிகை



திருமதி ஷாமென் நிஸாம்டீன்
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் அவரி 3 காலாண்டு மின் சஞ்சிகை 10.09. 2022 திகதி பிற்பகல் 3:30 மணி அளவில் மெய் நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாக வெளியிடப்பட்டது. இலை மறை காயாக ஆங்காங்கு மறைந்திருக்கும் இலக்கிய படைப்பாளிகளை இனம் கண்டு அவர்களுக்கு களம் கொடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்டது. தான் ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் அதன் ஸ்தாபகத் தலைவராக கவிதாயினியும் இலக்கிய வித்தகரும் ஆசிரியருமான திருமதி. மஷ்றா சுஹ்றுதீன் அவர்கள் செயல்படுகிறார். ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் இவ்வருடம் முதல் அவரிகாலாண்டு சஞ்சிகை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் இம்முறை அவரி மூன்றாவது அவிழ்கை மின்சஞ்சிகையின் ஆசிரியராக ஊடகவியலாளரும் உளவியல் ஆலோசகரும் ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் இணைப்பாளருமான லைலா அக்ஷியா செயல்பட்டார்.

அவரி மூன்றாவது அவிழ்கைவிழா மெய்நிகர் ஊடாக, ஸ்தாபகர் மஷ்றா சுஹ்றுதீனின் தலைமையில் நடைபெற்றது. கிராத், தேசிய கீதம், கழக கீதத்தை தொடர்ந்து உப தலைவர் ஏறாவூர் என். எம். ஆரிஃபா ஆசிரியை வரவேற்புரை வழங்க தலைமை உரையை அமைப்பின் ஸ்தாபகர் திருமதி மஷ்றா சுஹ்றுதீன் நிகழ்த்தினார். அடுத்து அவரி 3 காலாண்டு மின் சஞ்சிகை வெளியிடப்பட்டது. அதற்கான சிறப்பு காணொளியும் காட்சிப்படுத்தப்பட்டது. அடுத்து சஞ்சிகை விமர்சனத்தை ஆய்வாளரும் பேஜஸ் அறிவு மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான சிராஜ் மசூர்(அக்கரைப்பற்று) வழங்க பதிலுரையை சஞ்சிகை ஆசிரியர் லைலா அக்ஷியா வழங்கினார். அடுத்து செவிக்கு விருந்தாக ஒரு கிராமிய பாடலை அமைப்பின் உறுப்பினர் ஏறாவூர் ஜிப்ரியா இசைத்து அனைவரையும் மகிழ்வித்தார்.

அடுத்து விசேட அதிதியாக கலந்து கொண்ட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் சிரேஷ்ட அறிவிப்பாளர் புர்கான் பீ. இப்திகார் தனது உரையில் அமைப்பின் செயற்பாடுகளை வாழ்த்தியதுடன் ஒரு சில ஆலோசனைகளையும் வழங்கினார். அதனைத் தொடர்ந்து பிரதம அதிதி உரை தென்கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் வழங்கினார். இறுதியாக அமைப்பின் பொருளாளரும்,அவரி குழு உறுப்பினருமான நிந்தவூர் எம்.பி.பர்சானா நன்றியுரை வழங்கினார். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக அமைப்பின் நிர்வாக உறுப்பினரும், அவரி குழு அங்கத்தவருமான சாய்ந்தமருது றிப்கா அன்சார் (பிரதியதிபர் ) செயல்பட்டார்.

அன்றைய சஞ்சிகை வெளியீட்டின் அறிவிப்பாளராக ஸ்ரீ லங்கா பென் கிளப்பின் இணைச் செயலாளரும் அவரி குழு அங்கத்தவரும் POND சமூக சேவை அமைப்பின் உப தலைவியுமான கட்டுகஸ்தோட்டை ஷாமென் நிஸாம்டீன் செயற்பட்டார். இந்நிகழ்ச்சியை செந்தமிழ் fm நேரடி ஒலிபரப்பு செய்தது குறிப்பிடத்தக்கது. (இதனை முகப்புத்தகம் வாயிலாக கேட்கலாம்)







# தேசிய வாசிப்பு மாதமும் இலக்கிய நகர்வும்



ஜவ்சன் அஹமட்
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

தங்களின் ஓய்வு நேரங்களை குடும்பங்கள், நண்பர்கள் சகிதம் மகிழ்ச்சிகரமாக கழித்திட கிழக்கிலங்கையில் இருந்து அதிகமானோர் இலங்கையின் நாலா புறங்களிலும் செல்வதுண்டு. இருப்பினும் கிழக்கிலங்கையின் முக வெற்றிலை என எல்லோராலும் போற்றப்படும் திருகோணமலையின் வனப்பையும் வசீகரத்தையும் பார்ப்பதென்பது அரிதாகிப் போனதாகவே நான் உணர்கிறேன்.

ஏனைய மாகாணங்களை விடவும் கிழக்கு மாகாணத்தின் இயற்கை வளங்களின் மீது அதீத ஈர்ப்பும் கொண்டதனாலும் அதன் சுற்றுலா தளங்களை அதிகம் நேசிப்பவன் என்ற காரணத்தினாலும் மற்றொரு வெளிக்கள நகர்வுக்கு என்னை நானே தயார் செய்ய வேண்டி இருந்தது.

அது மட்டுமல்லாது யான் கற்ற கலாசாலையின் பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்த வருடாந்த ஒன்றுகூடலும் மறுபுறம் இந் நகர்வுக்கு காரணமாக இருந்தது எனலாம். இக் காலகட்டம் தேசிய வாசிப்பு மாதம் என்பதனாலும் 01.10.2022 ம் திகதி உலக சிறுவர் தினம் என்பதனாலும் கட்டாயம் இந் நகர்வுக்கு நான் என்னை தயார் படுத்திக் கொண்டேன்.

முதல் நகர்வு :- மருதமுனையில் இருந்து புறப்பட்டு கலை இலக்கிய ஆளுமைகளும் பல் துறை கலைஞர்களை தன்னகத்தே அதிகமதிகம் கொண்ட ஊரான ஏறாவூரை அடைந்தேன்.

பல தடவைகள் எனது இல்லம் வர வேண்டுமென என்னை அழைத்திருந்த பன் முக ஆளுமை இலக்கிய விமர்சகர், கலாபூஷணம், கவிஞர், ஏரூர்கவிக்கோ ஏ.சீ அப்துல் ரஹ்மான் அவர்களும் அவரது அன்பு மகன் முஹம்மது றஸீனும். அதன்படி முதல் சந்திப்பு ஏறாவூர் வாவிக்கரை பள்ளிவாசல் அருகே அவரது இல்லத்தில் அமைந்திருந்தது.

அழகிய உபசரிப்பு அன்பான வரவேற்பு பல் வேறுபட்ட விடயங்களையும் புத்திமதிகளையும் பெற்றுக்கொள்ளலாயிற்று. அது மட்டுமல்லாது அவரது "அக்கரைப்பச்சை" நூலையும் கரம் பற்றிக் கொண்டேன். அதன் நினைவாக சில நிழற்படங்களும் எடுக்கப்பட்டது.

ஈழத்து கலை இலக்கிய பெரு வெளியில் மட்டில்லா தொண்டாற்றிய கலாபூஷணம் கவிஞர் ஏ.சீ அப்துல் ரஹ்மான் அவர்களும் அவரது அன்பு மகனாரும் அவர்களது

குணத்தாலும் நற்சிந்தனையாலும் மனதில் நீங்கா இடம்பிடித்தவர்கள் என்பேன்.

அவரது "அக்கரைப்பச்சை "நூல் பிரதிகளில் ஒரு சிலதை என்வசமாக்கிக் கொண்டே என் பயணத்தை தொடரலானேன். இதற்கிடையில் பலரை சந்திக்க திட்டமிட்டிருந்தும் காலம் கை கொடுக்கவில்லை.

அவர்களுள். 1. கவிஞர், எழுத்தாளர்கள், பல் துறை கலைஞர் அன்புக்குரியவர் நௌஷாட் அவர்கள், கவிஞர் பாடலாசிரியர் பாடகர் முன்னால் செய்தி வாசிப்பாளர்கள் முஹம்மது இஸ்ஸத், கவிதாயினி ஏரூர் ஜிப்ரியா, பாடகர் றிஸ்வி, கவிஞர் எழுத்தாளர் மௌலவி மருதூர் ஜமால்தீன், கவிஞர் எழுத்தாளர் பூங்காற்று எப்.எம் இஸ்தாபகர் ஏரூர் முஹைதீன், கவிதாயினி ஜலீலா முஸம்மில், அடுத்த நகர்வில் இறைவன் நாடி இருந்தால் சந்திக்கலாம் என சிந்தித்தவனாக யாரையும் நிந்திக்காமல் என் பயணத்தை தொடரலானேன். என் இலக்கை அடையும் முன்னமே இராத்தரிக்க வேண்டியதாயிற்று. மூதூரில் முன்கூட்டியே ஏற்பாடுகள் எல்லாம் செய்திருந்தேன் நான் போட்ட கணக்கின்படி.

புலர்ந்த புதுப்பொழுது.... 2022.10.01 ம் நாள் சனிக்கிழமை சுமார் 9 மணி அளவில் தலைநகர் நோக்கிய பயணம் (மலைக்கு) பல இடர்கள் பல தடைகள் இடையில் மூதூர் இன்னும் சில பிரதேசங்களில் உள்ள சிறுவர் பூங்காக்களில் சிறுவர்தின நிகழ்வுகளையும் காணக்கிடைத்தன.

இரண்டாம் நகர்வின் முதல் சந்திப்பு செல்லுகின்ற வழியில் மட்டக்களப்பு நெடுஞ்சாலை திருகோணமலை சீனக்குடா பிரதேசத்தின் பொது நூலகத்தை பார்வையிடவும் அங்கு நடை பெற்ற தேசிய வாசிப்பு மாத சிறப்பு நிகழ்வில் கலந்து கொள்ளவும் கிடைத்தது. அவ்விடம் நூலக பொறுப்பாளர் மற்றும் நிருவாகத் தலைவர் உறுப்பினர்களுடன் சிறு சம்பாசனை குறுகிய நேரத்தில் நடந்தேறியது. அதில் இருவர் தாய்மொழியாக சிங்களம் பேசுபவர்கள் என்பது சிறப்பம்சம்.

என் வரவை ஒட்டி அவர்கள் வியந்து சந்தோசமடைந்ததை என்னால் உணர முடிந்தது. பின்னர் நான் புத்தகத்தை கையளிக்க நிழற்படம் எடுக்கப்பட்டது. பயணம் தொடர்கிறது. பல சுற்றுலாத்தளங்களையும் முப்படையினரின் முகாம்களையும் பார்வையிடக் கிடைத்தது.

இரண்டாம் நகர்வின் இரண்டாம் சந்திப்பு திரும்பி வரும் போது திருகோணமலை நகர சபை கட்டிடத் தொகுதியில் உள்ள பொது நூலகத்தை பார்வையிட சென்று அங்குள்ள வரவேற்பறையில் அனுமதி பெற்ற பிறகு நூலக பொறுப்பாளரை சந்திக்க அவர்களின் அறைக்குள் நுழைந்தேன். இன் முகத்தோடு மூவர் என்னை வரவேற்ற விதமும் என்னோடு பேசிய ஆதரித்த அனுசரித்த அன்புகாட்டிய விதமும் என்னை மெய் சிலிர்க்க வைத்தது.

இம் மூவாரிடமும் கிட்டத்தட்ட அரை மணிநேரம் பல விடயங்கள் பேசக்கிடைத்தது. குறிப்பாக துணிந்தெழு சஞ்சிகை பற்றியும் அதன் சேவைகள், தேவைகள் பற்றியும் சிலாகித்து பேசக்கிடைத்தது. தன்னடக்கம் கொண்ட, இன மத வேறுபாடுகள் களைந்த, ஊக்கப்படுத்தி தட்டிவிடும் அவர்கள் என்னை கவர்ந்த எழுத்தாளர்கள் பட்டியலில் உள்வாங்கப்பட்டனர். இருப்பினும் நேரமின்மை எங்களை சட்டென பிரித்துவிட்டது.

அவர்கள் 01. அரசரெத்தினம் அச்சுதன் :- சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர், கவிஞர், நூலகர். (இதுவரை மூன்று நூல்களை எழுதியுள்ளார்.) 02. க. வரதகுமார் :- நூலகர், எழுத்தாளர். 03. வ. ராஜ்குமார் :- நகரசபை உறுப்பினர் திருகோணமலை,

அடுத்ததாக நூலை கையளித்து புகைப்படம் எடுத்துக் கொண்டு விடைபெற்றேன். மறுபடியும் என் வரவை எதிர்பார்ப்பதாக அவர்கள் மூவரும் சொல்லியிருந்தார்கள். அடுத்தடுத்த கட்ட இறுதி நகர்வு கிண்ணியாவை நோக்கியதாக இருந்தது அங்கு கவிஞர், எழுத்தாளர் , இலக்கிய விமர்சகர், பன்முகை ஆளுமை பீ. றி.அஸீஸ் அவர்களை சந்திப்பதற்காக வேண்டி.

அதன்படி கிண்ணிய பெரியாத்துமுனை ஜாவா பள்ளிவாசல் மேல் தளத்திலுள்ள நூலகத்தில் பள்ளித்தலைவர் உட்பட கவிஞர் பீ. றீ.அஸீஸ் அவர்களை சந்திந்து பேசி பின்னர் அக்கரைப்பச்சை நூலையும் கையளித்தேன். அதிகம் பேசிக்கொள்ள இருவருக்கும் நேரம் இடம் கொடுக்காமையினால் அது சிறிய அறிமுக சந்திப்பாகவே இருந்தது. ஆனாலும் கூட எனக்காக நேரம் கொடுத்து முகமன் கூறி வரவேற்று அரவணைத்த கவிஞர் பீ.றீ.அஸீஸ் அவர்களையும் இலகுவில் மறந்து விட முடியாது.

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டிய எனது இலக்கிய நகர்வு புது அனுபவத்தையும், புதிய அறிமுகத்தையும் கொடுத்ததாகவே இருந்தது. பலரது ஆசீர்வாதங்களும் பிராத்தனைகளும் அதிகமதிகம் ஈட்டிக்கொடுத்தது என்பதும் குறிப்பிடத்தக்கது என்பேன்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 24 | 10 நவம்பர் 2022



# போதை சிதைத்தது

இயற்கையிலேயே ஒன்றிக் காணப்படும் காமம்
போதை நுகர்ந்ததும் பன்மடங்கு பன்மையாகி
பருவம் பாராது பசி தீர்க்க
பாலகனையும் சிதைத்து வதைக்க துடிக்கும்.

கல்வியில் சிறக்க வேண்டிய காரிகை
கற்பிழந்து கருவுற்று கடைத்தெருவில் கையேந்தி
கண்ணீருடன் மாந்தரிடம் இரங்கும் நிலை
போதையை நுகர்ந்தவனால் வந்ததென்பதையும் அறிவீரோ?

பள்ளிக்கு பட்டென பறந்து செல்பவளை
மது உண்டு மதி இழந்தோர்
மதம் பிடித்து வழி மறித்து
அவள் யாக்கையை பகுத்துக் கொள்கின்றனர்.


அந்தகாரத்தில் நடப்பவையை
பட்டப்பகலிலே படமெடுத்து
மதி கெட்ட மூடர்களின் களிப்பிற்கு
பாலகனின் மாசற்ற மாண்புமிகு மேனியை
போதைக்கு பணமாக ஏலம் விடுகின்றனர்.

குற்றம் செய்யாது சிதைந்த பிஞ்சுகளை
சுற்றும் முற்றும் அறியும் வண்ணம்
சுற்றித்திரிந்து சுற்றத்தாரில் சிலர் சுவையூட்டியதில்
கண்ணீரின் பக்கங்கள் பிஞ்சுகளின் வாழ்க்கையில்.

சிதைந்த உடலின் தழும்புகள் மறைந்தாலும்
சிதைக்கப்பட்ட பிஞ்சுகளின் உள்ளத்து வலிகளை
சிதைந்தாலே உணர முடியும் என்பது
கசப்பான உண்மை அறிந்து கொள்.



ஹிஷ்மா ஹிஷாம்
பேருவளை



# நானும் பணக்காரியாக வேண்டும்.

வாடிப் போன செடியொன்று வான் பொழிந்த மழையால் துளிர்த்து சிரித்துக் கொண்டிருந்தது. ஒரு துளி மழைக்காக ஏங்கும் மரம் போல எத்தனையோ மனங்கள் அன்புக்காகவும், அரவணைப்புக்காவும் ஏங்கிக் கொண்டிருக்கின்றன.

வைத்தியசாலைக்கு சென்று பாருங்கள். பார்க்க யாருமின்றி கதியற்றுக் கிடக்கும் வயோதிபர்களின் ஏக்கப் பெருமூச்சு நிச்சயம் உங்களை சுட்டெரிக்கும். நிற்கக் கூட அவர்களுக்கு சக்தியில்லை. பேரப்பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு பாடசாலைக்கும் வீட்டுக்குமாக நடக்கும் முதியவர்கள், தள்ளாத வயதிலும் தாயாகின்றனர்.

பேரப் பிள்ளைகளையும் தாங்களே மனதிலும் கையிலும் சுமந்து திரிவதால், சிலபோது நான் பலசரக்குக் கடைகளில் அவதானித்ததுண்டு. கடன் கேட்டுக் கிடைக்காமல் கவலையை வாங்கிக் கொண்டு புறப்படும் மனிதர்கள் நோயால் வருந்தி வருந்தி உடைந்த பின்னும் உழைக்கும் ஓடுகள்.

நீங்களும் கண்டிருப்பீர்கள். இவர்களுக்கு ஏதாவது செய்தாக வேண்டுமென மனது கிடந்து அடம்பிடிக்கும். கொடுக்க நினைப்பவனுக்கு எப்போதும் பஞ்சமா இல்லை அவர்களுக்கு சோகம் தான் தஞ்சமா? இருப்பவனுக்கோ ஆயிரம் தேவை! மனது ஒடிந்து போகும் காட்சிகளைக் கடந்து செல்லவாவது நான் பணக்காரியாக வேண்டும். வாழ்க்கை வசப்படாமல் போயிருக்கும் ஒரு குழந்தைக்காவது சிரிக்கக் கற்றுக் கொடுக்க நான் பணக்காரியாக வேண்டும்.

சப்பாத்து வாங்க முடியாத ஒரே காரணத்துக்காக பாடசாலைக்கு செல்லாமல் இருக்கும் ஒரு சோடிக் கால்களுக்காகவேனும் நான் பணக்காரியாக வேண்டும். நானும் பணக்காரியாக வேண்டும்.



ரூமி ரிஸானா.
சில்மியாபுர.



# வாய்ப்புக்களை தட்டிக் கழிக்காதீர்கள்.

வாய்ப்புக்கள் எப்போது கிடைக்கும் என வாயைப் பிளந்து கொண்டு அலைகின்றனர் சிலர்.

கிடைக்கின்ற வாய்ப்பை முடியாதெனச் சொல்லி வாய்ப்பிழந்து வாழ்க்கையை அழிக்கின்றனர் இன்னும் சிலர். உங்களுக்கு தெரியாத ஒரு விடயத்தில் உங்களுக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது என்றால் உங்களால் முடியாது என நினைத்து வாய்ப்பை தட்டிக் கழித்து விடாதீர்கள்.

உங்களுக்கு தெரியாத விடயமாக இருந்தாலும், அல்லது உங்களால் முடியாது என நினைக்கும் விடயமாக இருந்தாலும், கட்டாயம் நீங்கள் கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வாய்ப்புக்களை தேடி அலைபவர்களுக்கு மத்தியில் ஒரு வாய்ப்பு உங்களை தேடி வந்திருக்கிறது என்றால் அதில் ஏதோ ஒரு அருள் இருக்கிறது.

இந்த உலகம் அவ்வளவு சீக்கிரம் வாய்ப்புக்களை வழங்காது எனவே வாய்ப்புக்கள் கிடைக்கும் போது தோற்றுப் போனாலும் பரவாயில்லை வாய்ப்புக்களை கட்டாயம் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

வெல்வதும் தோற்பதும் இரண்டாவது கட்டம் இரண்டாவது கட்டத்தை நினைத்து முதற் கட்டத்தை தட்டிக் கழிப்பது மிகப்பெரும் முட்டாள்தனம்.

வெற்றி தோல்வியை நினைத்து வாய்ப்பைத் தட்டிக் கழிக்காதீர்கள் வெற்றியோ தோல்வியோ எதுவாக இருந்தாலும் முதலில் வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாய்ப்புக்களை சரியாகப் பயன்படுத்த தெரிந்த எல்லோருமே வெற்றியாளர்கள் தான்.

அஸ்ரூஸா ஜெவாஹிர்.
கெகிராவை.



# வெளிநாட்டவனின் வாழ்க்கை

வெளிநாடு என்றாலே நா நம நமக்கும் விழி முன்னே பல வண்ண உறைகளில் இனிப்புகள் மித மிதக்கும்.

பருவம் வந்ததும் கடல் தாண்டிச் செல்ல மனம் விரும்பும். ஒரு வழியாக பட்ட கடன்களையும், கண்ட கனவுகளையும் நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தின் பெயரில் உன் ஆசைப்படி விண்ணில் பறந்து ஊரறியா மண்ணில் காலடி வைப்பாய்.

ஆசை நிறைவேறியது என்று பெரு மூச்சு விட வேண்டிய நீ, விழி முழுதும் தழும்பி வழிகின்ற கண்ணீரோடு காட்சியளிப்பாய்.

அத்தருணம் ஒரு நிமிடம் கூட பல வருடமாய்த் தோன்றும். நாட்கள் போக, வாரமும் பிறக்க, மாதங்களும் கடக்க, வருடமும் வந்து விடும். உறவைக் காண உள்ளம் துடிக்கும்.

கை முழுதும் பணம் இருந்தும் இனிப்பு என்றால் வெறுத்துப் போகும். ஊருக்குப் பணக்காரன் உள்ளுக்குள் தனித்தவன். என்றே உன் வாழ்க்கைப் பயணம் தொடரும்.

நிஜாம் பாத்திமா சன்ஹா.
புத்தளம்.




# கத்தார் வாழ் இலங்கையர்களுக்கிடையில் 5 பேர் கொண்ட கால்பந்து போட்டி

கத்தார் வாழ் இலங்கையர்களுக்கிடையில் முதன் முதலாக அணிக்கு 5 பேர் கொண்ட FUTSAL PENALTY SHOOTOUT போட்டி தொடர், கத்தார் வாழ் புத்தளம் அமைப்பினால் 28.10.2022 திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கத்தார் அபு ஹமூரில் உள்ள கேம்பிரிட்ஜ் பாடசாலை விளையாட்டு அரங்கில் இப்போட்டி மதியம் 1 மணி முதல் இரவு 8 மணி வரை இடம் பெற்றது.

இதில் FUTSAL PENALTY SHOOTOUT போட்டி தொடர் மற்றும் சிறுவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

இதன் போது ரஸ்லான் ஆகிப் ஆகியோர் போட்டிகளை தொகுத்து வழங்கினார், கத்தார் வாழ் புத்தளம் அமைப்பின் தலைவர் சஜித் ஜிப்ரி, போட்டியின் ஒழுங்கு விதிகள் ஒருங்கிணைப்பாளர் ஜஹாங்கீர் ரஃபீக் மற்றும் தஸ்தீக் நளீர், மொஹமட் அஸ்லீயுடன் இணைந்து மொஹமட் ஹம்தியாஸீம் போட்டி நடத்துனர்களாக செயற்பட்டனர்.

இந்நிகழ்வில் ஸ்கை தமிழ் ஊடகத்தின் பணிப்பாளர் ஜே. எம். பாஸித், ஸ்கை தமிழ் ஊடகத்தின் முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி மற்றும் CDF அமைப்பின் தலைவர் மற்றும் நிகழ்வு குழு தலைவர் புர்ஹான் மற்றும் PAQ செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோரும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

இப் போட்டியில் இறுதி போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட கல்பிட்டிய FC அணியினருக்கும் Haaji 7S அணியினருக்கும் இறுதி போட்டி நடைபெற்றது. இதில் Haaji 7S அணியினர் வெற்றியை தனதாக்கி கொண்டனர். வெற்றிப்பெற்ற அணிக்கு கத்தார் வாழ் புத்தளம் அமைப்பின் தலைவர் சஜித் ஜிப்ரி அவர்கள் வெற்றிக்கிணத்தை வழங்கிவைத்தார்.

அத்துடன் இந்த போட்டிக்கு ஊடக அனுசரனை ஸ்கை தமிழ் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.




# கத்தார் வாழ் இலங்கை மகளிர் அமைப்பின் தீபாவளி கலாச்சார நிகழ்வு

கத்தார் வாழ் இலங்கை மகளிர் அமைப்பின் தீபாவளி கலாச்சார நிகழ்வு 28.10.2022 வெள்ளிக்கிழமை மாலை 04.30 மணிக்கு இலங்கை ஸ்டாஃபோர்ட் பாடசாலையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கத்தார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் முகைதீன் அவர்களும், கத்தார் வாழ் இலங்கை மகளிர் அமைப்பின் ஆலோசகர் டொக்டர் ஷெசூன் மொஹிதீன், கத்தார் வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சகத்தின் பதிப்புரிமை அலுவலகத் தலைவர் டொக்டர் இப்ராஹிம் மஜீத் அல்ரோமைஹி , சர்வதேச வர்த்தக சபை பிராந்திய ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் ரெமி ரௌஹானி மற்றும் அவர்களோடு கத்தாரின் முக்கிய பிரதிநிதிகளும், CDF அமைப்பின் தலைவர், கத்தார் வாழ் இலங்கை மகளிர் அமைப்பின் தலைவி மகதியா பாருக், மகளிர்



அமைப்பின் உதவிப் பொதுச் செயலாளர் மோகன பிரியா பிரசாத், பிரதி பொருளாளர் நஸ்மா மாஷார், மற்றும் உறுப்பினர்களும் பெற்றோர்களும் பலர் கலந்து கொண்டனர்.

தீபாவளியை சிறப்பிக்கும் முகமாக கலாச்சார நிகழ்வுகளும் வில்லுப்பாட்டு, நடனங்கள், பாடல்கள், பாரம்பரிய உணவு வகைகள், கடை தொகுதிகள் என பல பல நிகழ்வுகள் நடைபெற்றன.



# அண்ணலாரின் அழகிய வாழ்க்கை



ஐ.பாத்திமா சப்னம்.
தென் கிழக்கு பல்கலைகழகம்.

அருள் மறையாம் திருமறையை அழகுற சொல்ல
இறைத் தூதாய் வந்த இறுதி நபி எங்கள் திரு நபி!

மக்காவில் பிறந்து மதினாவில் மறைந்து
அரை நூற்றாண்டு கடந்து அருள் மறையை
போதித்தவர்.எங்கள் உத்தம நபி!

இருபத்து மூன்று ஆண்டுகள் உலகில்
இன்னல்கள் பல கண்டும் இறையடி சேரும் வரை
இறுதி மூச்சு பிரியும் போதும் இந்த உம்மத்திற்காய்
துடித்தது உங்கள் இதயம்!
உதிர்ந்தது உங்கள் கண்ணீர்!
உயர்ந்தன உங்கள் கரங்கள்!

வாய்ப்புகள் நிறைய இருந்தும்!
சுகபோகம் அருகில் இருந்தும்!
சலுகைகள் கையில் இருந்தும்!
அதிகாரம் தனக்குள் இருந்தும்!
எளிமை தான் எனக்கு வேண்டும்.
என வாழ்ந்து காட்டியவர். எங்கள் மாநபி!

காபிர்கள் மண் ஆசையை காட்டியும்,
பெண் ஆசையை காட்டியும்,
பொன் ஆசையை காட்டியும்
என் ஆசை எல்லாம் அருளாளனின் அற்புத சுவனமே!
என்று வாழ்ந்தவர்.

பெண் என்பவள் மனித இனமா என ஆராய்ந்த மூடர்கள்
மத்தியில், பெண் இன்றி நீ இல்லை.
உனக்கொன்றும் அவள் அடிமை இல்லை.
என்று பெண்ணுரிமை காத்த
மாமனிதர்!

போர்க்களத்தில் போர் வீரராய்,
மனைவியரிடத்தில் அன்புள்ள கணவராய்,
குழந்தைகள் போற்றும் தந்தையாய்,
தோழர்கள் தோள் கொடுக்கும் உத்தம தோழராய்,
உம்மத்தின் உயிரிலும் மேலானவராய்,
மொத்தத்தில் இறை போற்றும் இறைநேசராய்
என தனக்கென ஒரு சிறப்பை தன் வசம் கொண்டவர்.
எம் அருள் நபி!

கல்லெறிகள் பட்டும் சொல் வதைகள் கேட்டும்
நற்குணம் இழந்ததில்லை
துர்க்குணம் கொண்டதில்லை ஒருபோதும்.

அல்லாஹ்வின் பணியை அழகுற செய்தீர்!
உம்மத்திற்கு முன்மாதிரியாய்
உலகினில் வாழ்ந்தீர்!
எந்நிலையும் நன்நிலையென
எளிமையாய் கடந்தீர்.


திருமறையின் மறு உருவாம் எம் அருள் நபி முஹம்மத்
நபி!

# புகைப்படத் தொகுப்பு

புகைப்படக் கலைஞர்களுக்கான களம்

WINNER

## செப்டம்பர் மாத சிறந்த புகைப்படம்




செப்டம்பர் மாத சிறந்த புகைப்படமாக தெரிவு செய்யப்பட்ட
1000 ரூபாவை வென்ற வெற்றியாளர்

# புகைப்பட போட்டி - 2022

## மாதந்தோறும் சிறந்த புகைப்படங்களை தெரிவு செய்யும் போட்டி

**நவம்பர் மாதம் தலைப்பு : சிறந்த சுற்றுலா தளம்**

என்ற தலைப்பில் சிறந்த படைப்புகளை எதிர்பார்க்கின்றோம்.

அனுப்பவேண்டிய முடிவுத் திகதி:
**20 நவம்பர் 2022**

அனுப்பவேண்டிய முறை :
**skytamil.lk@gmail.com | +97431060249**

நவம்பர் மாத தலைப்புக்கு ஏற்ற புகைப்படத்தை அனுப்பி **Rs. 1000** பணப்பரிசை வெல்லுங்கள்.



# திசை மாறிய கப்பல்



மலேசியா நாட்டு
ஒருங்கிணைபாளர்
ஜஸ்ரா ஜலீல்

மழையில் நனைகிறோம் என்பதை கூட உணராது அவள் பாதையில் நடக்கவே இதனை கண்ட கண்ணம்மா ஓடி வந்து அம்மாடி இந்த மழையில் எங்கமா போற வா என்று அவளின் கைகளை பிடித்து இழுத்து ஆட்டோவில் ஏற்றிக் கொண்டு தனது சிறிய வீட்டிற்கு வந்தாள். கண்ணம்மாவுக்கு பிள்ளைகள் இல்லை. கணவரும் இறந்துவிட்டார்ர்ள. அவள் மட்டும் தான் தனியாக இருக்கின்றா. ரதியை தனது பிள்ளையாகவே அவர் பாசம் கொண்டவர் ரதி மறைத்தாலும் இவள் வாழ்வில் நடக்கும் அனைத்தும் அவருக்கு புரிந்ததுதான் அவளிடம் அதை பற்றி பேச எத்தனிக்கும் போதெல்லாம் அவள் வேற ஏதாவது கதையை பேசி திசை திருப்பிவிடுவாள் அவளுக்கு அதை பற்றி பேசுவது பிடிக்கவில்லை போலும் என்று அவருக்கு தெரிந்து அவரும் எதுவுமே பேசுவதில்லை. இன்று இக்கோலத்தில் அவளை பார்த்ததும் துடித்துப் போய்விட்டார் வீட்டுக்கு அழைத்து வந்தவர் அவளை கதிரையில் அமர வைத்து அவளின் தலையை துவட்டி விட்டு அவளை பார்க்கவும் பேய் அறைந்தது போல் அவள் இருக்கும் நிலையை பார்த்து அவளை அடித்து அவளை குழுக்கவும் அப்படியே மயங்கி சரிந்தாள். அவளுக்கு நீர் தெளித்து எழுப்ப முயன்றும் அவளை எழுப்ப முடியவில்லை. உடனே ஆட்டோவை வரவழைத்து பக்கத்து வீட்டு சகோதரியை கூப்பிட்டு ஆட்டோவில் தூக்கி வைத்து வைத்தியசாலைக்கு சென்றார்.

அங்கே வைத்தியர் அவளுக்கு தேவையானவைகளை செய்துவிட்டு கண்ணமாவிடம் வைத்தியர் சொன்னார் இவர் ஏதோ ஒரு அதிர்ச்சிக்கு ஆளாகி இருக்கிறார். இவருக்கு தொடர்ந்து ரீட்மன்ட் சரியாக கொடுத்தால் சரியாகிவிடும் ஒன்றும் பயப்புட தேவை இல்லை என்று கூறவும் எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை டாக்டர் இவளை குணப்படித்தி கொடுங்கள் என்று கண்ணம்மா அழவும் கண்டிப்பாக நான் குணப்படுத்தி கொடுக்கின்றேன் என்றார். அடுத்த நாள் அவளுடன் டாக்டர் கனிவாக பேசி அவளின் நிலை அறிந்தார்,அவருக்கும் கண்களில் கண்ணீர் வருவது போல் இருந்தது தொடர்ந்து அவளை தட்டிக் கொடுத்து அவளுக்கு தேவையான அனைத்து ரீட்மன்ட்டும் வழங்கிவிட்டு அவர் கண்ணம்மாவோடு உரையாடிவிட்டு அவளை தனது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அவரும் தனியாகத்தான் இருக்கிறார். அவருடைய மகன் திருமணமாகி கனடாவிலே வசிக்கிறார். கணவனும் இறந்துவிட்டார்.

இந்த கொஞ்ச நாளிலே அவளது குணத்தை அறிந்து தனது பிள்ளை போல் பார்க்க ஆரம்பித்துவிட்டார். அதனாலே அவளை தன்னோடு வைத்துக் கொள்ள ஆசைப்பட்டார். அவளை வீட்டுக்கு அழைத்து வந்தவர் இங்க பாரு இனிமேல் நான்தான் உனக்கு எல்லாமே என்னை உன் சொந்த அம்மாவாகவே நினைத்துக் கொள் என்று சொல்லிவிட்டு மடியில் அவளை தூங்க வைத்து ஆறுதலாக தலையை கோதிவிட்டார். அவள் கண்களில் கண்ணீர் வரவும் இப்போ

எதற்கு அழுகிறாய் என்றதும் உங்கள் பாசம் கண்டு கண்ணீர் வருகிறது அம்மா என்றாள். இனிமேல் நீ ஒரு துளி கண்ணீரும் விடக்கூடாது அடுத்து அடுத்து எப்படி முன்னேறுவது என்று மட்டுமே பார்க்க வேண்டும் என்று சொல்லவும் சரி அம்மா இன்று தலையசைத்தால். நாளைக்கு நீ பாடசாலை படிப்பை தொடர வேண்டும் என்று கூறிவிட்டு அடுத்த நாளே அவளை ஆங்கில பாடசாலையில் கொண்டு போய் விட்டார். அவளும் வழமையைவிட அதிகமாகவே படிக்க ஆரம்பித்து விட்டாள் இந்த விடயங்கள் ஒன்றுமே அறியாத அவள் அப்பாவுக்கு இதனை தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக அன்று அவளை பாடசாலையில் விட்டு விட்டு அவரை சந்திக்க சென்றார் டாக்டர்.அவரை சந்தித்து அவருக்கு புரியும்படியாக மெதுவாக அனைத்து விடயங்களையும் சொல்லவும் எனது மகளின் வாழ்க்கை என்னால் இப்படி ஆகிவிட்டதே என்று கண்ணீர் வடிக்கவும் அவருக்கு ஆர்தல் சொல்லிவிட்டு நான் அவளை நல்ல இடத்திக்கு கொண்டுவந்து அவளுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பேன். இப்போது நீங்கள் தைரியமாக இருங்கள் என்று கூறிவிட்டு கிளம்பிவிட்டார்.

தனது மகளின் வாழ்க்கை தன்னாலே இவ்வாறு ஆகிவிட்டது என்று அழுது கொண்டே மறுநாள் சைக்கிள் ஒட்டவும் லாரிக்கு மோதி அதே இடத்திலே இறந்துவிட்டார். தனது தந்தையின் இறப்பை கேள்விப்பட்ட ரதிக்கு உலகமே இருண்டது போல் ஆகிவிட்டது ஏன் இறைவா எனக்கு மட்டும் இந்த நிலை என்று அழமட்டுமே அவளால் முடிந்தது. அவளை தேற்றி அவளுக்கு தேவையானவைகளை டாக்டர் அம்மா பார்த்துக் கொண்டார். இப்படியே நாட்கள் நகர்ந்தது, அன்று அவளது உயர்தர பரீட்சை பெறுபேறுகளும் வந்தது அதில் அவள் அதிக புள்ளிகளை பெற்று முதல் மாணவியாக வெற்றி பெற்றாள். அதனால் அவளுக்கு அனைத்து ஊடகங்களாலும் வந்து நேர்காணல் எடுத்து பத்திரிகை தொலைக்காட்சி என்று அவள் புகழ் பரவியது அதே போன்று அவளுக்கு பரிசுப் பொருட்களும் குவிந்தன. படிப்பில் மட்டும் கவனம் செலுத்தாது அவளை பல துறைகளில் கவனம் செலுத்த வைத்தார் டாக்டர். அவளும் அனைத்து துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்த செய்தால் உலக ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டு முதலாவதாக வந்து நாட்டிற்கே பெருமை சேர்த்துக் கொடுத்தாள்.அதனால் அவளுக்கு அரசாங்கத்தால் வீடு கார் என்று வழங்கப்பட்டது அதே போல் பாடல் பாடி உலக பாடல் போட்டியில் கலந்துகொண்டு வென்று அதிக பணப் பரிசுப் பொருறகளை தன் வசமாக்கினாள்.

இவ்வாறே பல்கலைக் கழகத்தில் நன்றாக படித்து இன்ஜினியராகும் நாளும் வந்தது. டாக்டர் அம்மாவை அழைத்துக் கொண்டு தனது கல்லூரியை நோக்கி சென்றாள் பட்டம் பெற. அவளை அழைத்ததும் அவள் மேடையில் ஏறி நின்று எனது இந்த பட்டத்துக்கு காரணமான அம்மாவின் கைகளால் வாங்கவே ஆசைப்படுகிறேன் என்று சொல்லிவிட்டு அவளே இறங்கி வந்து டாக்டர் அம்மாவை அழைத்துக் கொண்டு மேடைக்குச் சென்று அவர் கைகளாலே அந்த பட்டத்தை வாங்கிக் கொண்டாள். அந்த நிகழ்வுகள் முடிந்து இருவரும் வீட்டை நோக்கி வந்தனர் அம்மா இன்றைக்கு நான் மிகவும் சந்தோசமாக இருக்கின்றேன். ஏன் என்றால் உங்கள் கைகளால் இந்த பட்டத்தை வாங்கியதால் அம்மா என்று சொல்லிவிட்டு வழமை போல் அவர் மடியில் படுத்துக் கொண்டாள்.அப்போது டாக்டர் அம்மா உனக்கு என்று இன்னும் நிறைய விடயங்கள் இருக்கின்றன கண்ணு,ஆம் அம்மா எனக்கு ஒரு கார் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் அதற்கு தேவையான விடயங்களை இப்போதே ஆரம்பிக்க வேண்டும், கண்ணு உனக்கு எல்லாமே நான் பண்ணி கொடுக்குறேன்.

நீ ஒன்றும் யேசிக்க தேவையில்லை நாளைக்கே அதற்கான விடயங்களை பார்க்க ஆரம்பிக்கலாம், அம்மா என்னால் உங்களுக்கு கஷ்டம் வேண்டாம் அம்மா அப்போ நீ என்ன உன் அம்மாவா நினைக்கவில்லை அப்படிதானே, அப்படி இல்லை அம்மா இதுவரை நீங்கள் எனக்காக அதிகம் செய்துவிட்டீர்கள் என்றதும் தாயின் கடமைகளை செய்வதில் குற்றம் ஏதும் இல்லையே என்றாள். அம்மா என்று அனைத்துக் கொண்டாள். அடுத்த நாள் தொழிற்சாலை சம்பந்தமான விடயங்கள் படிப்படியாக நடை பெற ஆரம்பித்தது. இவ்வாறே இரண்டரை மாதங்கள் கழித்து இன்று தொழிற்சாலை திறக்கும் வைபவம் நடை பெற்றது அனைத்து பெரிய புள்ளிகளையும் அந்த வைபவத்திக்கு அழைத்து இருந்தார் டாக்டர் அம்மா. அத்தோடு பத்திரிகை தொலைக்காட்சி ஊடகங்கள் அனைத்தையும் வரவழைத்து மிக கோலாகளகமாக திறப்புவிழா இனிதே நடந்து முடிந்தது. அவளுக்கான எம் டீ அறையில் அவளை உட்கார சொல்லியும் அவள் உட்காராது டாக்டர் அம்மாவையே உட்கார வைத்து அழகு பார்த்தாள். இவ்வாறு இவளின் வளர்ச்சி அசுர வேகத்தில் போய் கொண்டு இருக்க இது எதையும் அறியாத ரிஷி அவளை அனுப்பிவிட்டோம் என்று மகிழ்ச்சியோடு இருந்தான். ஆனால் அந்த மகிழ்ச்சி கொஞ்ச நாளைக்கே நிலைத்தது கார்த்திக் இறந்ததில் இருந்து லட்சுமி அவர் சிந்தனையால் யோசித்து நோயாளி ஆகிவிட்டார்.

தொடரும்..

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

# தனித்துவமே நமது அடையாளம்



துணிந்தெழு சஞ்சிகையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எழுத்தாளுமைகளுக்கும்
வாசகர் நெஞ்சங்களுக்கும், அனைத்து உறுப்பினர்களுக்கும்
இதயபூர்வமான நன்றிகள்...!




#Thuninthelu www.skytamilmedia.com